REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஏப்ரல் 1 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்
வரு. 92 இல. 79 | Monday 01, April, 2024 | 16பக்கங்கள் | 50/-

## பேக்கரி பொருட்கள் தொடர்பில் அறிவிப்பு

அரசாங்கம் வரிச்சலுகை வழங்கினால் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியுமென, அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது. வரி அதிகரிப்பால் பேக்கரி தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கம் சரியான வரிக் கொள்கையை பின்பற்றினால் பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியும் எனவும் அகில இலங்கை பேக்கரி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

### 69 இலட்சம் மக்களின் ஆணை இருந்தும்

## நாடு சீர்குலைய அனுமதிக்க முடியாது என்பதாலேயே கோட்டா பொறுமை காத்தார்

**நாமல் ராஜபக்ஷ**



படம்: சுதத் நிஷாந்த

அரசாங்கம் வீழ்ச்சியடைந்தாலும் நாடு சீர் குலைவதற்கு அனுமதிக்க முடியாது என்பதாலேயே, 69 இலட்சம் மக்களின் ஆணை இருந்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோட்டாக்கள், ஆயுதங்களால் போராட்டத்தை ஒடுக்கவில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய அமைப்பாளரும், ஹம்பாந்தோட்டை 06

## நாட்டில் முதலாவது AI திரைப்படம் தயாரிப்பதற்கு அரசு ஆதரவளிக்கும்

### ரைகம் விருது விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

பழமையான பாரம்பரியத்துடன் காணப்படும் திரைப்படக் கூட்டுத்தாபனம் நவீன தொழில்நுட்பத்துடன் மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு இலங்கை திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடக அபிவிருத்தி நிறுவனமாக கட்டியெழுப்பப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களை நவீன தொழில்நுட்ப அறிவுடன் வலுவூட்டுவதற்கு வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். நவீன தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகத்துறையை தயார் செய்ய வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

செயற்கை நுண்ணறிவு (AI) தொழிநுட்பம் இன்று உலகத் திரைப்படத்துறையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில் முதலாவது AI 06



### SLFP கட்சியிலிருந்து எம்மை நீக்கியமை சட்டவிரோதமானது

# பதவி நீக்கத்துக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

### கட்சித் தலைவர் மைத்திரிக்கு எதிராக அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட பதவி நீக்கப்பட்ட மூவரும் கருத்து

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதவிகளிலிருந்து சட்டவிரோதமாக நீக்கப்பட்டமை தொடர்பில் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக பதவி வகித்த அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு டார்லி வீதியிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற விசேட கூட்டத்தின்



பின்னர், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை கட்சியின் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கவே, ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 06



உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோணியார் தேவாலயத்தில் நடைபெற்ற திருப்பலிப் பூஜையின் போது பிடிக்கப்பட்ட படம். அருட்தந்தை, உயிர்த்த யேசுவின் திருச் சொரூபத்தால் ஆசிர் வழங்குவதையும் படத்தில் காண்க. 2019 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதலில் மரித்த தங்களது உறவுகளுக்காக விசேட மன்றாட்டுக்கள் ஏறெடுக்கப்பட்டன. (படம்: சுலோச்சன கமகே)



06 **முட்டை விலை 35 ரூபாவாக குறையும்**

### யாழ். நகர் செல்வா சதுக்கத்தில்

## தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த தினத்தில் மலர் அஞ்சலி



யாழ். விசேட நிருபர்

தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு, நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். நகர் செல்வா சது க்கத்திலுள்ள அன்னாரின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில், இந்நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு, மலரஞ்சலி செலுத்தினர்.

## பாதாள உலக கும்பலை ஒடுக்க மோட்டார் சைக்கிள் படையணி

### நூறு பொலிஸாரடங்கிய குழு ரோந்து

பாதாள உலக கும்பலை ஒடுக்கும் நோக்கில் நூறு பொலிஸாரைக் கொண்ட மோட்டார் சைக்கிள் படையணிகளை, மேல் மாகாணம் மற்றும் காலியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



இந்த மோட்டார் சைக்கிள் படையணி சக்தி வாய்ந்ததெனவும் குற்றவாளிகள் தப்பிச் செல்லும் போது, அவர்களை துரத்திச் சென்று பிடிப்பதற்கு இலகுவாக்கும் வலுவைக் கொண்டதாக இந்த படையணி அமைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதற்காக பொலிஸ் 06

## இலங்கை – இந்திய சமுதாய பேரவையின் தலைவராக ஜீவன்

இலங்கை இந்திய சமுதாய பேரவையின் தலைவராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவாகியுள்ளார். பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் (SLICC 2024) கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹொட்டலில் ராஜூ சிவராமன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே, பேரவையின் தலைவராக அமைச்சர் ஜீவன் 06



### வற் வரி, சமூக பாதுகாப்பு பங்களிப்பு

## வரிகளுக்கான வருமான வரம்பு குறைக்கப்பட்டதாக அறிவிப்பு

வற் வரி, சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கான வருடாந்த வருமான வரம்பு 80 மில்லியன் ரூபா, தற்போது 60 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால், நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 60,000 ரூபா வருமானம் ஈட்டும் நாட்டிலுள்ள பெருமளவிலான வர்த்தகர்கள், வரிக் கோப்புகளைத் திறக்க வேண்டிய நிலை ஏற்படும். 06

## சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் ஊடாக 06

## சந்தைக்கு புதிய வகை Golden Rice அறிமுகம்



நாட்டில் அரிசிக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரிசி வகை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. நெல் சந்தைப்படுத்தல் சபை இதனை, அறிமுகஞ் செய்யவுள்ளது. சிவப்பு அரிசியை நாடாக மாற்றி, தங்க அரிசி என்ற பெயரில் சந்தையில் வெளியிடவுள்ளதாக இதன் தலைவர் புத்திக இத்தமல்கொட 06

## சில பிரதேசங்களுக்கு வெப்ப அபாய எச்சரிக்கை



மேல், வடமேல், வடமத்திய, வடக்கு மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி, மொனராகலை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் வெப்பநிலை கடுமையாக இருக்குமென ' இயற்கை அபாயங்கள் முன்னெச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது. மேல், வடமேல் வடமத்திய, வடக்கு மற்றும் தென் மாகாணங்கள் மற்றும் இரத்தினபுரியின் 06

## மது அருந்தும் போட்டியில் அதிகளவு குடித்தவர் உயிரிழப்பு

### ஹற்றன் லெதண்டி தோட்டத்தில் சம்பவம்

மது அருந்தும் போட்டியில் வெல்வதற்காக அதிகளவு மது அருந்திய மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார். இப்போட்டி, ஹற்றன் லெதண்டி தோட்டத்தில் இடம்பெற்றது. ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெதண்டி தோட்டத்தின் மால்ப்ரோ பிரிவில் வசிக்கும் கணேசன் இராமச்சந்திரன் என்ற 39 வயதுள்ள மூன்று பிள்ளைகளின் 06

## நாடுள்ள நிலையில் ரணிலே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும்



தற்போது, நாடு உள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக வருவதே சரியானதென, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 சர்வதேச மகளிர் தின நிகழ்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் கூட்டுற கலையரங்கில், கிழக்கு மாகாண கூட்டுறவு 06

## பாராளுமன்ற தேர்தல் விரைவில் நடாத்தப்பட வேண்டும்



மக்கள் ஆணையில்லாத பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார். சட்டவாக்கத் துறை, நிறைவேற்றுத்துறை என்பன 06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 01-02 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.38 |
| ஸுபஹ் | 04.53 |
| சூரிய உதயம் | 06.10 |
| ழுஹர் | 12.16 |
| அஸர் | 03.21 |
| மஹ்ரிப் | 06.20 |
| இஷா | 07.30 |

# நகர்வலம்



## மௌலவி இப்ராஹீம் இந்நாட்டு முஸ்லிம்களின் புலமைச் சொத்து

### அனுதாப செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

இந் நாட்டு முஸ்லிம்களின் புலமைச் சொத்துக்களில் ஒன்றாக மதிக்கக்கூடிய, இலங்கையிலிருந்த இஸ்லாமிய அறிவுலக ஆளுமைகளில் ஒன்று மறைந்து விட்டதாக மௌலவி ஏ. எல் .எம். இப்ராஹீம் (கபூரி) எம்.ஏ. அவர்களின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார் .

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மர்ஹூம் இப்ராஹீம் அவர்களுடன் ஈடுபாடு எங்களது மாணவப் பருவத்தில் இருந்தே இருந்து வந்துள்ளது. அவரது ஆக்கங்களாலும், உரைகளினாலும் நாங்கள் வெகுவாகக் கவரப்பட்டிருந்தோம் .

கபூரிய்யா அரபுக் கல்லூரியில் கற்றுத் தேறி, பேராதனை பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டம் பெற்று அங்கு இஸ்லாமிய, அரபு மொழி துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி முஸ்லிம்கள் மத்தியில் புத்திஜீவிகள் பலர் உருவாவதற்கு அவர் பாரிய பங்களிப்பை செய்திருக்கிறார். களனிப் பல்கலைக் கழகத்திலும் அவர் விரிவுரையாளராக இருந்திருக்கின்றார். ஜாமிஆ நளீமிய்யாவின் வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு இருந்திருக்கிறது .

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீராக தலைமைத்துவம் வழங்கிய காலங்களிலும் பின்னரும் அதனோடு ஒன்றித்துப் பயணித்த இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, ஆயிஷா சித்தீக்கா பெண்கள் கல்லூரி, இன நல்லிணக்கத்திற்கு உயரிய பங்களிப்பைச் செய்து வரும் தன்வீர் அகடமி போன்றவற்றின் வளர்ச்சிக்கும் அவர் பாரிய உந்து சக்தியாக செயல்பட்டிருக்கின்றார்.

சிங்கள மொழியில் தப்ஹீமுல் குர்ஆனை மொழிபெயர்ப்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்து ஆற்றிய பணி அளப்பரியது .

இலங்கையில் இயக்க ரீதியான இஸ்லாமிய அழைப்புப் பணி காலப்போக்கில் போதிய புரிந்துணர்வின்மை காரணமாக உள்ளும், புறமும் எதிர் விளைவுகளைச் சந்திக்க நேர்ந்த சூழ்நிலைகளில் கூட, மிகவும் நிதானமாக விமர்சனங்களுக்கு அறிவார்ந்த முறையில் நளினமாக முகம் கொடுத்து, மக்கள் மத்தியில் போதிய தெளிவை ஏற்படுத்துவதில் மௌலவி இப்ராஹீம் அனைவருக்கும் சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்திருக்கின்றார் .

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரைப் பொருந்திக் கொண்டு மேலான ஜன்னதுல் பிர்தௌஸுல் அஃலா என்ற சுவனபதியை அவரது நிரந்தரமான தங்குமிடமாக ஆக்கியருள்வானாக .

## மனித பாவனைக்குதவாத ரூ. 15 கோடி பெறுமதியான

# 10,000 கோதுமை மா மூடைகள் சுகாதார அதிகாரிகளால் மீட்பு

### கனேவல்பொல களஞ்சியசாலையில் விற்பனைக்கு தயாராக இருந்தவேளை சுற்றிவளைப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கெக்கிராவ பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கனேவல்பொல பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 15 கோடி ரூபா பெறுமதியுடைய மனித பாவனைக்குதவாத 10 ஆயிரம் கோதுமை மா மூடைகளை கெக்கிராவ சுகாதார அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மனித பாவனைக்குதவாத காலாவதியான கோதுமை மா மூடைகள் சந்தையில் விற்பனை செய்வதற்கு தயாராக வைத்திருந்த நிலையில் சுகாதார அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 25 மற்றும் 50 கிலோ நிறையுடைய மூடைகளில் பாவனைக்குதவாத கோதுமை மா வைக்கப்பட்டிருந்ததாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிளகுகளை உலர்த்தி பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் பெரிய களஞ்சியசாலை ஒன்றிலேயே இந்த மனிதப் பாவனைக்குதவாத கோதுமை மா மூடைகளை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட காலாவதியாகியுள்ள கோதுமை மா வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாகும். இந்த கோதுமை மாவில் காணப்பட்ட பூச்சிகளை அகற்ற கிருமி நாசினி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த கோதுமை மாவில் விஷம் கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன் காலாவதி திகதியை மாற்றி புதிய பொதிகளில் அவற்றை பொதி செய்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவென விற்பனை செய்ய முற்பட்டதாக சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். இந்நிலையில் மனித பாவனைக்குதவாத பருப்பு, கோதுமை மா வகைகளை களஞ்சியப்படுத்தி வைத்துள்ள களஞ்சியசாலையை கெக்கிராவ பதில் கடமை நீதவான் குமார தென்னகோன் கடந்த (30) பார்வையிட்டுள்ளார்.

## இஸ்லாமிய பணிகளுக்கான தன்னை அர்ப்பணித்தவர் மௌலவி இப்ராஹீம்

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர், இஸ்லாமிய அறிஞர் மௌலவி ஏ.எல்.எம்.இப்ராஹீம் அவர்களின் மறைவு மிகவும் கவலை தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். அவர் தனது அனுதாபச் செய்தியில்,

”மௌலவி இப்ராஹீம் இலங்கையில் நன்கு அறியப்பட்ட இஸ்லாமிய அறிஞர் ஆவார். முஸ்லிம் சமூகத்தின் பெரும் ஆளுமையாக செயற்பட்ட இவர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிய கற்கைபீடத்தினை நிருவகிப்பதிலும் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, அமீராகவும் செயற்பட்டிருந்தார். அன்னார் இலங்கை முஸ்லிம் சமூகத்தை அறிவு சார்ந்த சமூகமாக வழிநடத்துவதிலும், எதிர்கால அறிவுசார் புத்தாக்க விடயங்களை முன்கொண்டுசெல்வதிலும்பெரும்பங்காற்றியவர். மேலும், நாடு பூராகவும் தனது தஃவா பணிகளை முன்னெடுத்து, இஸ்லாமிய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை நல்கியவராவார். பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியக் கற்கைநெறியில் முதல் இடத்தை பெற்ற அவர், அப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய மற்றும் அரபு கற்கை நெறிகளுக்கான ஆய்வாளராகவும் செயற்பட்டிருந்தார்.

அவர் ஒரு சிறந்த வாசகர். அரபு மொழியிலிருந்து பல புத்தகங்களை தமிழுக்கு மொழிபெயர்த்திருந்தார்.

தனது வாழ்நாளின் முழுப்பகுதியையும் இஸ்லாமியப் பணிகளுக்காக அர்ப்பணித்திருந்த அன்னாரின் மறைவு முஸ்லிம் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு மன ஆறுதலை வழங்க இறைவனை பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ்! அன்னாரின் சேவைகளையும் நல்லமல்களையும் பொருந்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்மிகு சுவன பாக்கியத்தை நல்குவானாக ஆமீன்.

## இலங்கை முஸ்லிம்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்போடு உழைத்தவர் மௌலவி இப்ராஹீம்

### கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை



இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக சன்மார்க்க பணி, சமூகப் பணி, தீர்க்க தரிசனமிக்க கல்விப் பணி ஆற்றி பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஆரம்ப கால தலைவர், பல இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் ஸ்தாபகர் மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீமின் மரணச் செய்தி முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளதாக கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளது.

பேரவையின் தலைவர் பேராசிரியர் மௌலவி ஜலால்தீன் விடுத்துள்ள அறிக்கையில், மௌலவி இப்றாஹீம் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆற்றிய பணிகள் மிகவும் தீர்க்க தரிசனமிக்க பணிகள் மட்டுமன்றி, இச் சமூகத்தின் எதிர்கால நலனையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர், குறிப்பாக கடந்த அரை நூற்றாண்டு காலம் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்கு எதிர் நீச்சலாக மௌலவி இப்றாஹீம் பல்வேறு திட்டங்கள் அமைந்துள்ளது என்பது அது பற்றிய ஆய்வை மேற்கொள்வோர் கண்டுகொள்ளலாம்.

குறிப்பாக, பெண்களுக்கான கல்வியை நவீன மயப்படுத்தியமை, ஆங்கிலம், நவீன தொழில் நுட்பம் உடையதாக அதை மாற்றியமை, முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இந்நாட்டின் பெரும்பான்மை சமூகத்தின் மொழியான சிங்கள மொழியில் பரீட்சயம் கொண்ட மார்க்க அறிஞர்களை உருவாக்கியமை இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதற்கான திட்டங்கள், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய பல்வேறு காலகட்ட இனக்கலவரங்களில் இருந்து மீள்வதற்கான வழிகள், முஸ்லிம்களின் பெருமதிப்பிற்குரிய உலமாக்களின் சபையான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையை மிகவும் ஆளுமையும், ஆற்றலும் கொண்டதாக மாற்றுதல் என பல பரிமாணங்களை கொண்டதாக மௌலவி இப்றாஹீமின் திட்டங்கள் அமைந்திருந்தன.

தனது பல்கலைக்கழக ஆசிரியப் பணியில் பல ஆற்றலும், அறிவும் கொண்ட புத்திஜீவிகளின் உருவாக்கத்தில் மௌலவி இப்றாஹீமின் பங்களிப்பு என்றும் நினைவு கூரப்பட வேண்டியவையாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தென் மாகாணத்தில்

# ரமழான் இறுதிப்பத்து நிகழ்வுகள்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

தென் பிராந்திய பள்ளிவாசல்களில் புனித ரமழான் மாத இறுதிப் பத்துத் தினங்களையும் சிறப்பாக நல்லமல்களுடன் சிறப்பிப்பதற்கான ஏற்பாடுகளை பள்ளிவாசல் நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர். இஃதிகாப், கியாமுல் லைல், தௌபா, இஸ்திஃபார், துஆ, குர்ஆன் திலாவத் மற்றும் ஸஹர் ஏற்பாடுகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் இரவு முழுவதும் இடம் பெறுகின்றன. குறிப்பாக 27ம் நாள் நிகழ்ச்சிகளுக்கும் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் அதிகமான பள்ளிவாசல்களில் ஹாபிழ்கள் மூலமாக தினமும் ஒவ்வொரு ஜுஸ்ஊக்கள் ஓதி தராவீஹ் தொழுகை நடாத்தப்படுகின்றன.



ரத்மலானை ஜும்ஆப் பள்ளிவாசலில் அபிவிருத்திப் பணிகளும், இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வும் பள்ளிவசலில் (25) வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின்போது கல்கிசை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் புஸ்பக்குமார மற்றும் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜயசேகர, கல்கிசை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமூக சேவைபிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி தயானந்த மற்றும் கல்கிசை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் உட்பட ரத்மலானை பிரதேச பிரிவில் வாழ் சமூக சேவை பிரஜா உறுப்பினர்கள், பிரதேச வாழ் மக்களும் இந்த இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள் அஷ்ரப் ஏ சமத்)

## வட மத்திய மாகாண

# ஆசிரிய போட்டிப்பரீட்சையின் நேர்முக பரீட்சை நாளை

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு இரண்டாம் கட்டமாக நியமனம் வழங்குவதற்கு போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகளின்படி நேர்முகப் பரீட்சைக்கு 2155 பேரினது பெயர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி சிங்கள மொழி மூலம் 1893 பேருக்கும் தமிழ் மொழி மூலம் 262 பேருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை (02) மற்றும் நாளை மறுதினம் (03), 04 ஆகிய திகதிகளில் அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

# இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பம்

### அலிசப்ரி ரஹீம் எம்.பி நேரில் சென்று பார்வை

**புத்தளம் தினகரன் நிருபர்**



பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் முயற்சியால் மற்றுமொரு இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

சிலாபம் ஜெயபிம பகுதியில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட பாலத்தின் வேலைகள் நாட்டில் ஏற்பட்ட கொரோனா முடக்கம் மற்றும் பொருளாதார முடக்கம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் மக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்துவந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கொண்டு சென்றதையடுத்து அந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெயபிம பாலத்தை பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அதிகாரிகள் சகிதம் நேரில் சென்று பார்வையிட்டார்.

## வவுனியா – கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் சுற்றிவளைப்பு ; 2 கிலோ கேரள கஞ்சா மீட்பு

### சாரதி கைது

**(அநுராதபுரம் தினகரன் நிருபர்)**



வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி சென்றுக்கொண்டிருந்த தனியார் பஸ் வண்டியில் மிகவும் சூட்சுமமான முறையில் இரண்டு கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவை எடுத்துச் சென்ற பஸ் சாரதி அநுராதபுரம் வலய போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 40 வயதுடைய சிலாபம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அநுராதபுரம் பண்டுளகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வலய போக்குவரத்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பஸ் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டது.

சாரதி ஆசனத்திற்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினையும் கைப்பற்றியுள்ளதுடன் பஸ் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி வலய போக்குவரத்து பொலிஸார் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு பஸ் வண்டியுடன் சந்தேக நபரை ஒப்படைத்துள்ளனர்.



புத்தளம் ரஸ்மி பேக் ஹவுஸ் உரிமையாளரின் ஏற்பாட்டில் புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜிதில் கடந்த 28 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படம்.

# இரு கைதிகள் தப்பியோட்டம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் திறந்த வெளி சிறைச்சாலையில் இருந்து இரு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். குறித்த இரு கைதிகளும் பார்வையாளர்களுக்காக திறக்கப்படும் சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்து வந்துள்ளனர். இருவரும் சிறைச்சாலை சீருடைகளை களற்றி விட்டு சிவில் உடையில் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை வட்டாரம் தெரிவித்தது. தப்பிச் சென்றுள்ள இருவரையும் கைது செய்வதற்கு அநுராதபுரம் பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தப்பியோடிய கைதிகளில் அநுராதபுரம் ஸ்ரீராவஸ்திபுர பகுதியைச் சேர்ந்த ஒருவரும் களனி பகுதியைச் சேர்ந்த ஒருவருமாவர்.

# அஸ்கிரி மஹாநாயக்கருடன் ஐ.தே.க பிரதித் தலைவர் ருவன் சந்திப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பௌத்த ஒன்றியத்தின் சுஜித் அக்கரவத்த, ஆகியோர் அஸ்கிரிய பீட மகாநாயக்கர் சங்கைக்குரிய வரக்காகொட தம்ம சித்த ஶ்ரீ பஞ்சானந்த ஞானரத்ன தேரரை, கண்டி அஸ்கிரி விகாரையில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில், கண்டி மாவட்ட பிரதேச அமைப்பாளர்களான நதீக நாணயக்கார, திலக் ரணசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர் ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத் திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாக பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன இதன் போது தெரிவித்தார்



திருகோணமலை புனித மரியாள் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனை பெருந்தொகையான மக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. மக்களுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் ஆராதனையில் கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.




# நரகிலிருந்து பாதுகாப்பு தேடுவோம்

அல்லாஹ்தஆலா இவ்வுலக வாழ்வில் நற்செயல்கள் புரிபவர்களுக்கு மறுமையில் அவர்களை கண்ணியப்படுத்தும் முகமாக சுவர்க்கத்தையும் தீயவைகளை புரிபவர்களுக்கு தண்டனையாக நரகத்தையும் படைத்துள்ளான்.

நரகம் என்பது வேதனைகளும் தண்டனைகளும் நிறைந்த கொடூரமான இடம். அதிலிருந்து பாதுகாப்பு தேடுமாறு அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் ஏவியுள்ளார்கள். அல்லாஹ் அவனது திருமறையில் 'முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும், கற்களுமேயாகும். அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள். தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள். (66:6)

'இன்னும், யார் வரம்பு மீறுவாரோ தன் இறைவனின் வசனங்களை நம்பிக்கை கொள்ளமாட்டாரோ அவரை இவ்வாறுதான் தண்டிப்போம். இன்னும், (அவனுக்கு) மறுமையின் தண்டனை மிகக் கடுமையானதும் நிரந்தரமானதும் ஆகும். (20:127)

நரகத்தின் தண்டனை மிகக் கடுமையானது. அதன் நெருப்பிற்கு முடிவு கிடையாது என்று அல்லாஹ் பல வசனங்களில் குறிப்பிட்டுள்ளதோடு நரகத்தை பயந்து கொள்ளுமாறும் சுட்டிக்காட்டியுள்ளான். நபி (ஸல்) அவர்கள், ஒவ்வொரு நாளும் சுபஹ் மற்றும் மஃரிப் தொழுகைக் கிடையில் ஏழு தடவைகள் நரகத்திலிருந்து பாதுகாப்பு தேடக்கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறே ஒவ்வொரு ஜும்ஆவிலும், பிறகு தங்களுடைய எல்லா பிரச்சாரங்களிலும். தங்களுடைய தோழர்களுக்கு நரகத்தை குறித்த பயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ஆகவே, ரமழானின் மிக முக்கியத்துவம் மிக்க இறுதிப்பத்தை அடைந்துள்ள நாம் நரக வேதனையில் இருந்து அதிகமதிகம் பாதுகாப்பு தேடுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

குறுகிய காலத்தில் அதிக பலன்தரக் கூடிய

# செவ்விளநீர் ரக செய்கையில் ஆர்வம் காட்டப்பட வேண்டும்





விரிவான ஆய்வுகளை நடத்தி, குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய செவ்விளநீர் ரகங்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். அத்துடன் செவ்விளநீர் உற்பத்திக்கு புதிய தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய முறைகளைப் பயன்படுத்துவதும் முக்கியமென்றும் அவர் தெரிவித்தார்.

ஹோமாகம தாம்பேயில் செவ்விளநீர் உற்பத்திக் கிராமத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹோமாகம அபிவிருத்திக் குழுவின் தலைவரும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு 85 செவ்விளநீர் கன்றுகளை நடும் மாதிரி கிராமங்களாக 85 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் முதலாவது செவ்விளநீர் உற்பத்திக் கிராமமாக ஹோமாகம தம்பேவை மையமாகக் கொண்டு இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் கீழ், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தரமான செவ்விளநீர் மரங்களை கொண்ட தோப்பாக அப்பகுதி பிரபலப்படுத்தப்படும். பிரதேசத்திலுள்ள விவசாயிகளின் சமூக அமைப்பு உட்பட நூறு விவசாய குடும்பங்களுக்கு விசேடமாக உருவாக்கப்பட்ட உயர்தர செவ்விளநீர் கன்றுகள் வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய அமைச்சர், "நாட்டில் ஆரம்பிக்கும் எந்தவொரு திட்டத்தையும் முன்னோடித் திட்டமாக இந்தப் பிரதேசத்துக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் எப்போதும் முயற்சித்து வருகிறோம்.

06

# தொழில்முனைவோர் ஆலோசகர்களை பயிற்றுவிக்க புதிய பயிற்சித் திட்டம்

கைத்தொழில் அபிவிருத்தி சபை நடவடிக்கை



தொழில் முனைவோர் கலாசாரத்தை (Entrepreneur Culture) வளர்த்தல் , பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்தலின் நகர்வாக, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தொழில் முயற்சியில் ஆலோசகர்களைப் பயிற்றுவிக்க உள்ளது.இதற்கான ஒரு புதிய திட்டத்தையும் அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது. ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரம் மூலம் உலக சந்தையில் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது. இரத்மலானையில் உள்ள நீர் மற்றும் சுகாதாரத்திற்கான சிறப்பு மையத்தில் ( Centre of Excellence for Water and Sanitation(CEWAS) நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்தியர் சாரங்க அலகப்பெரும இத்திட்டத்தை வெளியிட்டார். ஏற்கனவே உள்ள மற்றும் ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்களை வளர்ப்பதிலும் வழிகாட்டுவதிலும் பயிற்சி பெற்ற ஆலோசகர்களின் முக்கிய பங்கை, வைத்தியர் அலகப்பெரும இங்கு வலியுறுத்தினார்.

# உத்தேச பூநகரி தொழிற்பேட்டை திட்டம் மக்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை

ஆய்வறிக்கை சாத்தியப்படின் திட்டம் நடைமுறை



பூநகரி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளதாக கூறப்படும் உத்தேச தொழிற்பேட்டைகளால் மக்களுக்கோ, சுற்றுச்சூழலுக்கோ எவ்வித பாதிப்புகளும் இல்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்திலேயே,அப்பகுதிக ளில் தொழில் பேட்டை அமைக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.பூநகரி, பொன்னாவெளி பிரதேசத்தில் சீமெந்து தொழிற்சாலை உள்ளிட்ட பல முதலீட்டுத் திட்டங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சுற்றுச் சூழலுக்கும் பிரதேச மக்களுக்கும் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் தொடர்பாக ஆராயும் மக்களுடனான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் (30) நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இக் இக்கலந்துரையாடலில், சமூகப் பிரதிநிதிகள், பொது மக்கள், துறைசார் அதிகாரிகளெனப் பலர் கலந்துகொண்டு கருத்தக்களை தெரிவித்தனர்.

பூநகரி, பொன்னாவெளி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலைகள் மற்றும் முதலீடுகளால் மக்கள் பாதிக்கப்படக் கூடாது.சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாமல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம்.எனவே,விஞ்ஞான ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சாதக அறிக்கைகள் கிடைத்தால் மாத்திரமே திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இவ்வாறு பொது மக்கள் அமைச்சரிடம் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினர்.

பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர் மேலும் கூறுகையில் –

வடக்கில் பூநகரி நகரை ஒரு பொருளாதார நகரமாக உருவாக்கும் முயற்சியாகவே சீமெந்து தொழிற்சாலை, காற்றலை மின் உற்பத்தி, சுண்ணக்கல் அகழ்வு. கடற்பாசி வளர்ப்பு, கடலட்டைப் பண்ணை உள்ளிட்ட பல திட்டங்களை முன்னெடுக்க திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆனால், அவற்றை நடைமுறைப் படுத்தும் முன்னர் அப்பகுதியில் வாழும் மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதன் படியே பிரதேச மக்களின் கருத்துக்களை கேட்டறிய கூட்டம் நடத்தப்படுகிறது.

அத்துடன் இங்கு உங்களது கருத்தக்களே முதன்மை பெறும். இது உங்களது பிரதேசத்தின் பொருளாதார வளர்சிக்கான ஒன்றாகும். ஆனாலும்,இதன் சாதக பாதகங்கள் ஆராயப்படுவது அவசியமாகும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மக்களின் கருத்தக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. எதுவானாலும்,மக்களின் நலனுக்கே முன்னுரிமையளிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2024 ஏப்ரல் 03ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக ரூ. 135,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124G053 | LKA18224J047 | LKA36425D041 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 60,000 | 45,000 | 135,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஏப்ரல் 03
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஏப்ரல் 05
வழங்கப்படும் திகதி : 2024 ஏப்ரல் 05
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஏப்ரல் 03 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்கள் தொடர்பான பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என்.டி.வை.சி. வீரசிங்க
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

*வழங்கும் அலுவலகம்:*
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

# எரிபொருட்களின் விலைகள் இன்று முதல் குறையலாம்?

எரிபொருட்களின் விலைகளில் இன்று திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். தற்போதைய விலை சூத்திரத்தின் கீழ், இந்த எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப் படவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மற்றும் உலக பொருளாதார நிலவரப்படி நாட்டில் எரிபொருள் விலை குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டின் பொருளாதார நிலை மற்றும் எதிர்வரும் பண்டிகைக் காலத்தை கருத்தில் கொண்டு இன்று ஏப்ரல் மாதம் எரிபொருள் விலையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், கடந்த மார்ச் மாதத்தைப் பொறுத்தவரை, பெப்ரவரி (29) நள்ளிரவில் எண்ணெய் விலை திருத்தம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

# டொஸ் லங்கா நிறுவனத்தில் கைதிகளுக்கு வேலைவாய்ப்பு

பகுதிநேர அடிப்படையில் சந்தர்ப்பம்

பியகம முதலீட்டு சபைக்கு உட்பட்ட *TOS Lanka Co. (Pvt) Ltd* நிறுவனம், சிறைக் கைதிகளை பகுதி நேர அடிப்படையில் வேலைக்கு அமர்த்தும் *(CSR) Corporate social responsibility* என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த *TOS* லங்காவின் தலைவர் *Jitsuo Mikasa*, சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பித்தார். இதற்கு அரச நிறுவனம் சாதக பதிலளித்ததை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் கீழ் கைதிகளுக்கான சில வேலைகள் சிறைச்சாலை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.இவ்வேலைகளை சிறைக் கைதிகள் மேற்கொள்வர். அதிகரித்த கொடுப்பனவுகள் இதற்காக வழங்கப் படும்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 19ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 21

### குறள் தரும் சிந்தனை



ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்

தாகம் கொண்டு தவிக்கும் பசுவுக்காகத் தண்ணீர் வேண்டுமென இரந்து கேட்டாலும்கூட, அப்படிக் கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

## நாட்டின் புரட்சிகர மாற்றங்களுக்கு வித்திடும் கல்வித்துறை சீர்திருத்தங்கள்

இலங்கையின் கல்வி துறை சீரமைக்கப்பட வேண்டும். அது நவீன யுகத்திற்கு ஏற்ற கல்வித் துறையாக மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கான தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகளும் வலியுறுத்தல்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

கல்வியில் மேற்கொள்ளப்படும் முன்னேற்றங்கள், அபிவிருத்தியின் ஊடாகவே நாட்டிலும் சமூகத்திலும் மறுமலர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்படக் கூடியதாக இருக்கும்.

குறிப்பாக நாடொன்றின் அபிவிருத்திக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் கல்வி முன்னேற்றம் இன்றியமையாததாகும்.

இந்தப் பின்புலத்தில் கல்வி முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணர்ந்துள்ள அனைத்து தரப்பினரும் நவீன யுகத்திற்கு ஏற்ப கல்வியில் சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

நவீன யுகத்திற்கு ஏற்ற முறையில் கல்வியை சீரமைத்து முன்னேற்றகரமான முறையில் முன்னெடுக்கும் நாடுகளும் பிராந்தியங்களும் தான் பொருளாதார முன்னேற்றங்களில் முன்னணியில் உள்ளன.

இந்நாடு சுதந்திரமடைந்த போது பொருளாதார ரீதியில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இலங்கை இருந்தது. அன்றைய காலகட்டத்தில் இலங்கைக்கு கீழ் மட்டத்தில் இருந்த பல நாடுகள் பொருளாதார ரீதியில் தற்போது இலங்கையை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. அதற்கு அந்தந்த நாடுகள் கல்வித்துறையில் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் பாரிய பங்களி்ப்புக்களை நல்கியுள்ளன.

ஆனால் இந்நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கடந்தும் இன்னும் வளர்முக, மூன்றாம் மண்டல நாடாக உள்ளது. இந் நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுத்தது. அந்த நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்துள்ள போதிலும் நவீன யுகத்திற்கு ஏற்ப ஏற்கனவே கல்வியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இவ்வாறான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேர்ந்திருக்காது என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது. அதேநேரம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வித்துறையின் மேம்பாடு இன்றியமையாதது என்ற கருத்தும் பலமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவர் தலைமையிலான அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்தவும் கல்வி சீர்திருத்தத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர். நவீன யுகத்திற்கு ஏற்ப கல்வி முறையில் துரித சீர்திருத்தங்களைச் செய்வதில் அவர்கள் அக்கரையுடன் செயற்படுகின்றனர். நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திற்கு கல்வித்துறை சீர்த்திருத்தங்கள் மிகவும் அவசியமானது. அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இலவசக் கல்விக் கொள்கையை முன்னெடுக்கும் இந்நாட்டிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

தற்பாது நாட்டில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. அவற்றில் முதலாம் தரம் முதல் உயர் தரம் வரை 42 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பணியில் 2 இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த அனைத்து ஆசிரியர்களையும் 2033 ஆம் ஆண்டுக்குள் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றப்படவிருக்கின்றனர்.

இத்திட்டத்தின் கீழ், இலங்கையின் முதலாவது கல்வி பல்கலைக்கழகம் எதிர்வரும் ஜுன் மாதம் ஆரம்பித்து வைக்கப்படவிருகின்றது. இப்பல்கலைக்கழகம் பாராளுமன்றத்தில் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டதும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் தலைமையகம் மஹரகமவில் அமைக்கப்படவிருக்கின்ற போதிலும் தற்போது நாட்டில் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்தின் வளாகங்களாக தொழிற்படவிருக்கிறது.

இலங்கையின் முதலாவது கல்விப் பல்கலைக்கழகமாக விளங்கும் இப்பல்கலைக்கழகம், விஞ்ஞான தொழில்நுட்பம், கல்வி, விஷேட கல்வி, தகவல் தொழில்நுடபம், உடற்கல்வி உள்ளிட்ட 08 பீடங்களைக் கொண்டதாக இயங்கும். ஒவ்வொரு பீடங்களும் ஆய்வுத் துறைகளைக் கொண்டதாக இருக்கும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம் இப்பல்கலைக்கழகத்தின் கட்டட தேவைகளுக்காக தற்போதுள்ள கட்டிடங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தில் இப்பல்கலைக்கழகத்தின் நிமித்தம் ஒரு பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஆகவே இலங்கையின் துரித பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திடும் வகையில் முன்னெடுக்கப்படும் இப்பல்கலைக்கழகத்திட்டம்இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பின்புலமாக அமையும். இதில் மாற்றுக்கருத்துக் இடமில்லை என்பது தான் புத்திஜீவிகளின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# கூட்டு ஒப்பந்த முறையே அரச பிரதிநிதிகளின் ஈடுபாட்டை முடிவுக்கு கொண்டு வந்தது

### சர்வதேச விவசாய தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர் நாயகமும், மனித அபிவிருத்தி தாபனத்தின் பணிப்பாளருமான கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் அளித்த பேட்டி



**கே: மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து தற்போது அதிகம் பேசப்படுகிறது. அதனை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில் : இது தேர்தலை இலக்காகக் கொண்ட பிரச்சார நடவடிக்கையாகும். ஆளும் கட்சியும் அதனோடு இணைந்துள்ள மலையக அரசியல் தொழிற்சங்கங்களும் பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களின் சம்பளம் குறித்து தற்போது அதிகம் பேசி வருகின்றன.

ஆனால் தோட்டத்தொழிலாளர்கள் வரலாற்று காலம் முதல் தங்களுடைய உரிமைகளுக்காக போராடி வருகின்றனர். இதில் பலர் உயிர் தியாகமும் செய்துள்ளனர். 1984களில் சமசம்பள போராட்டம், 2011 இல் சம்பள போராட்டம், 2021 இல் சம்பள போராட்டம் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். தற்போது கிடைக்கின்ற ரூ 1000 விடவும் அதிகரித்த நாட் சம்பளத்தைத் தொழிலாளர்கள் கோருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரிய சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. என்றாலும் எதிர்வரும் தேர்தலில் மலையக மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு தான் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கையை பேசுபொருளாக்கியுள்ளனர் என நான் கருதுகின்றேன்.

**கே: ஆனால் கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளனவே?**

பதில்: பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன்கள் விடயத்தில் தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளை நான் மறைக்க முற்படவில்லை. என்றாலும், தங்களுடைய பரம்பரை பரம்பரை அரசியலுக்காக தோட்டத்தொழிலாளர்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதை விட சலுகைகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.

கூட்டு ஒப்பந்தம், தொழிலாளர் சம்பளம் என்பவற்றை விரிவாக நோக்குவது அவசியம். தொழிலாளர்களின் நாட்சம்பளம், குறைந்தபட்ச சம்பள கட்டளை சட்டத்தின் கீழ் சம்பள நிர்ணய சபையினால் நிர்ணயம் செய்யப்படும் முறையாகும். இது 1992ல் கூட்டு உடன்படிக்கையின் பின் வலுவிழந்தது. கூட்டு ஒப்பந்தமானது தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்படுகின்றது. 1992ல் கூட்டு ஒப்பந்த முறை அறிமுகத்துடன் அரச பிரதிநிதிகளின் ஈடுபாடு முடிவுக்கு வந்தது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்தத்தினால் போதிய பயன்களை கொண்டு வர முடியவில்லை. 2016ல் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு அடிப்படை சம்பளமாக ரூ 800.00ஐ கோரியுள்ளனர். எனினும் கூட்டு ஒப்பந்தத்தில் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்திற்கமைய, தோட்ட தொழிலாளரின் நாட்சம்பளமாக ரூ 500.00





வும், வரவு ஊக்குவிப்பாக ரூ 60.00வும், விலை ஊக்குவிப்பாக ரூ 30.00வும், (தேயிலை மற்றும் இறப்பர் விலையை பொறுத்து) உற்பத்தி ஊக்குவிப்பாக ரூ 140.00வும் சேர்த்து மொத்தமாக ரூபா 730.00 நிர்ணயிக்கப்பட்டது. ஒரு தொழிலாளர் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட மொத்த வேலை நாட்களில் 75 வீதமான வரவை பதிவு செய்தால் மட்டுமே நாளாந்த மொத்த சம்பளமான ரூ 730.00 ஐ பெறலாம் என அக்கூட்டு ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

மேலும் இக்கூட்டு ஒப்பந்த நடவடிக்கைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டு கமிட்டி ஆகிய தரப்பினரே பங்குபற்றி வருகின்றனர். மாற்று கருத்து கொண்ட இடதுசாரி தொழிற்சங்கங்களோ அல்லது நடுநிலையான தொழிற்சங்கங்களோ பங்குபற்றாமை இக்கூட்டு உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கி வந்துள்ளது.

**கே: தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில் : தற்போது கிடைக்கின்ற ரூ 1000 சம்பளமானது, 2021 மார்ச் மாதத்திற்கு பின்பு கிடைக்கப்பெறுகிறது. இது கொவிட் காலக்கட்டத்திலே கிடைக்கப்பெற்றதாகும். கடந்த 2022ல் இந்நாடு பொருளாதார ரீதியில் கடும் நெருக்கடிக்கு உள்ளானதோடு அரசியல் பிரச்சினையையும் எதிர்கொண்டது. அதனால் வாழ்க்கை செலவு மிக வேகமாக அதிகரித்தது. பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இப்பின்னணியில் தான் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து பேச வேண்டும். அதனால் ரூ 1700 என்பது எவ்வாறு கணிக்கப்பட்டது என்பது புதிராகவே உள்ளது. எந்த தொழிற்சங்கம் அல்லது எந்த தொழிலாளர் குழு ரூ 1700 என்ற மதிப்பீட்டை செய்தார்கள் என்பது தெளிவுப்படுத்தப்படவில்லை. இது குறித்து தொழிற்சங்கங்கள் கருத்து தெரிவித்திருந்தால் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். இறுதியில் இச்சம்பளத்தை கூட தங்களால் மட்டும் தான் பெற்றுக் கொடுக்க முடியும் என்று சில மலையக தொழிற்சங்க, அரசியல் கட்சிகள் குறிப்பிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

**கே: தற்போதைய பொருளாதார சூழலில் தோட்டத் தொழிலாளர்களுக்காக நீங்கள் எதிர்பார்க்கும் நியாயமான நாட்சம்பளம் எத்தகையது?**

பதில் : பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு வழு சேர்ந்து வருகின்றனர். கொவிட் காலத்தில் முழு நாடும் முடங்கி இருந்தபோது தோட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். பொருளாதார நெருக்கடிக் காலத்தில் கூட இந்நாட்டிற்கு அந்நிய செலவாணி அல்லது டொலரை தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மூலம் கொண்டு வந்தனர்.

எனவே இம்மக்கள் என்றும் இந்நாட்டிற்கு சுமையாக இருந்ததில்லை. இவர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு பலம் சேர்ப்பவர்களாவர்.

அரசு மற்றும் ஏனைய துறைகளில் சமயாசமய அடிப்படையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நாட்சம்பளம் ரூ 1500.00 லிருந்து ரூபா 2000.00 வரை காணப்படுகிறது. உதாரணமாக கட்டிட தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாட்சம்பளம் ரூ 2500.00 ஆக உள்ள அதே வேளை, அநேகமாக தனியார் துறைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நாட்சம்பளம் ரூ 1500.00 முதல் ரூ 2000.00 வரையிலானதாக உள்ளது. அதனால் நாட்டின் பொருளாதார நிலை மற்றும் தனிநபரின் மாதாந்த வாழ்க்கைச் செலவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தது ரூ 2000 ரூ 2500 இடைப்பட்டதாக நாட்சம்பளம் வழங்கப்படுவது அவசியம்.

நேர் காணல்:
இக்பால் அலி...

### அனைத்துலக சுழியக் கழிவு தினம்:

# யாழ். குடாநாட்டில் ஆரோக்கிய பவனியும் தூய்மையாக்கலும் விழிப்புணர்வும் முன்னெடுப்பு

அனைத்துலக சுழியக் கழிவு தினமான (International Zero waste Day) மார்ச் 30 ஆம் திகதி(நேற்று) சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் ஆகியோர் தலைமையில் 'யாழ் ஆரோக்கிய பவனி' தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வு செயற்பாடும் நடைபெற்றது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ் மாநகரசபை, யாழ் பிரதேச செயலகம், யாழ் பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் கீழ், யாழ் நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மைக்கல் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் நிலையம், துரையப்பா விளையாட்டரங்கப் பகுதி மற்றும் யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஏக காலத்தில் ஆரம்பித்த இப்பணி, 3 வீதிகள் ஊடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். பொலிஸ் நிலையப் பகுதியில், சிகரம் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் யாழ் ஆரோக்கிய கழக யோகாசன பயிற்சியாளர் மற்றும் பிரித்தானிய விருந்தோம்பல் கற்கை நிறுவன தலைவர், மாணவர்களின் பங்கேற்புடன், யாழ் பொலிஸாருடன் இணைந்து, சிகரம் படலை நிறுவனத் தலைவர் கோ. றுஷாங்கன் தலைமையில் தூய்மையாக்கல் பணி ஆரம்பிக்கப்பட்டது.

ஏக காலத்தில், யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில், இந்தியத் துணைத் தூதுவர், யாழ் மாநகர ஆணையாளர் ஆகியோரின் தலைமையில், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரணவநாதன், யாழ் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் இணைந்து ஆரோக்கிய பவனி தூய்மையாக்கல் பணியை ஆரம்பித்த வைத்தனர்.

இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தலைமையிலான இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் குழுவினர் சைக்கிள் பவனியாக வைத்தியசாலை வீதி, மணிக் கூட்டுக்கோபுரம் ஊடாக பண்ணை பகுதியை அடைந்து, பண்ணைப் பாலத்தின் ஊடாக மண்டைதீவு வரையில் பவனியாக சென்று திரும்பினர். பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் கோட்டை பின் பகுதியை தூய்மையாக்கும் பணியில் துணைத்தூதுவர் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.







யாழ். மாநகர சபை ஆணையாளர் தலைமையில் ஆரியகுளத்திலிருந்து புறப்பட்ட ஒரு அணியினர் ஆரியகுளம் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக வைத்தியசாலை வீதியை அடைந்து, அங்கிருந்து மகாத்மா காந்தி வீதியூடாக, மணிக்கூட்டுக் கோபுரம், பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் கோட்டை, பண்ணை நடைபாதை ஊடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடைய, இரண்டாவது அணி, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதியூடாக முட்டாசு கடைச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாக, தபால் கந்தோர் சந்தியைக் கடந்து சுற்றுவட்ட வீதியூடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடைந்தனர்.

மூன்றாவது அணி, யாழ் மாநரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரவினரின் தலைமையில் பிரதான வீதி தண்ணீர் தாங்கி பகுதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வீதியூடாக பண்ணை சுற்றுவட்டத்தை அடைந்தனர்.

பண்ணை சுற்றுவட்டப் பாதையை அனைத்து அணிகளும் வந்தடைந்ததும், காலை 8.30 மணியளவில ரில்கோ உல்லாச விடுதியினரின் ஏற்பாட்டில் தாக சாந்தி வழங்கப்பட்டதுடன், விசேட கலந்துரையாடல் மற்றும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

சிகரம் படலை வடக்கு மாகாண சுற்றுலா சேவைப் பிரவின் தலைவர் கோ. றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ் மாநகர ஆணையாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர்.

மாநகர சபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், ஜெற்விங் மற்றும் ரில்கோ உல்லாச விடுதிகளின் உயரதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மானுடவியல்



159

பிள்ளையார் விழித்தெழுந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கும் அடியார்களுக்கும் அருளிச்செய்து, வைகறையிலே விபூதி தரித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார். சூரியோதய காலத்திலே பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹரஹர என்னும் ஓசையுடனே முத்துச் சிவிகை முதலியனவற்றைக் கொண்டு எதிரே வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, "இவை திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கடவுள் தந்த பொருள்கள், ஏற்றருளும்" என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அக்கடவுளுடைய திருவருளை "எந்தையீசனெம் பெருமான்" என்னுந் திருப்பதிகத்தினாலே பாடி திருவருள் வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி, அதில் ஏறியருளினார். அப்பொழுது சிவனடியார்களெல்லாரும் ஆரவாரித்தார்கள். பிராமணர்கள் சமஸ்தரும் வேதகோஷஞ் செய்தார்கள். இந்திராதிதேவர்கள் ஆரவாரித்துப் புஷ்பமாரி பொழிந்தார்கள். பலவகைப்பட்ட மங்கலவாத்தியங்கள் ஒலித்தன.



முத்துச்சிவிகையிலே ஏறியருளிய பரமகருணாநிதியாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார், மேலே முத்துக்குடை நிழற்றவும் சிவனடியார்களும் பிராமணர்களும் நெருங்கி ஆனந்தமேலீட்டினாலே கூத்தாடித் தங்கள் கண்களின்றும் பொழிகின்ற ஆனந்தவெள்ளத்தினுள்ளே குளிக்கவும், முத்துச்சின்னங்கள் "சமஸ்த லோகங்களும் சிவனடியார்களும் வேதங்களும் உய்யும்படி சைவசிகாமணி வந்தார்;

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# சித்திரையின் சிறப்பு

தமிழர்களைப் பொறுத்தமட்டும், சித்திரை தொடங்கியே வருடம் கணக்கிடப்பட்டு வந்துள்ளது. இதற்கு சித்தர்கள் எழுதியுள்ள நாடி ஜோதிடக் குறிப்புகளே சாட்சி. நாடி ஜோதிடத்தில் நாள், நட்சத்திரம், மாதப் பெயர்களை மறைவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.



அப்படிப்பட்ட குறிப்புகளில் சித்திரையை 'முதல் மாதம்' என்றும், பங்குனியைக் 'கடை மாதம்' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல சித்திரையில் சூரியன் சஞ்சரிக்கும் மேஷ ராசியைத் 'தலை' என்றும், 'தலை ராசி' என்றும் சொல்லியுள்ள குறிப்புகள் உள்ளன. இடைக்காட்டுச் சித்தர் அவர்கள் மாத பலனையும், வருட பலன்களையும் எழுதி வைத்துள்ளார். அவற்றை இன்றுவரை நாம் பின் பற்றி வருகிறோம். அவரும் சித்திரை தொடங்கியே வருடத்தைக் கணக்கிட்டுள்ளார். உயிரினம் வளர்வதற்குக் காரணமான பல முக்கிய அவதாரங்களும் சித்திரையில்தான் நடந்தன என்பது சித்திரையின் சிறப்பை மேலும் உறுதி செய்கிறது. சதுர் மஹாயுகம் ஆரம்பித்தது சித்திரை முதல் திகதியன்று என்று பார்த்தோம். சித்திரையின் வளர்பிறை துவிதியையில் கிருத யுகம் பிறந்தது. சித்திரையின் வளர்பிறைப் பஞ்சமியில் கூர்ம கல்பம் பிறந்தது. சித்திரையின் வளர்பிறை சப்தமியில் கங்கை நதி பிறந்தது. சித்திரையின் வளர்பிறை திரயோதசியில் மத்ஸ்ய அவதாரம் நடந்தது. சித்திரையின் தேய்பிறைப் பஞ்சமியில் வராஹ அவதாரம் நடந்தது.

**அஸ்வினியில் தொடங்கும் சித்திரை :** சித்திரைக்கு உள்ள மற்றொரு முக்கியச் சிறப்பு, அஸ்வினி நட்சத்திரத்தில் அது ஆரம்பிக்கிறது. அஸ்வினி தேவர்கள் என்னும் இரட்டையர் இந்த நட்சத்திரத்தின் அதிபதிகள் ஆவர். அவர்களைக் குதிரைகளாகக் கொண்டு ஒற்றைச் சக்கரத்தேரில் சூரியன் வான் மண்டலத்தில் பவனி வருகிறான் என்று ரிக் வேத மந்திரங்கள் தெரிவிக்கின்றன. அஸ்வினி நட்சத்திரத்துக்கு மருத்துவர் என்ற சிறப்புப் பெயர் உண்டு.

அஸ்வினி நட்சத்திரத்துக்கு அதிபதியான அஸ்வினி தேவர்கள், தேவ மருத்துவர்கள் எனப்படுகிறார்கள்.

நம்முடைய பிறந்த நாளை நாம் பிறந்த நட்சத்திரத்தின் போது கொண்டாடுவது போல புத்தாண்டுப் பிறப்பை சூரியன் அஸ்வினி நட்சத்திரத்தில் இருக்கும்போது கொண்டாடுவதால், அந்த அஸ்வினி தேவர்களது அருளால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சூரியன் பல பிறந்த நாள்களைப் பெறுகிறது. இதன் முக்கியத்துவதைச் சொல்லும் ரிக் வேத ஸ்லோகம் ஒன்றுள்ளது. 'சூரியன் அஸ்வினியில் புறப்பட்டபோது இருந்தது போல, எல்லா தெய்வங்களும் எங்களுக்கு ஆயுளைக் கொடுக்கட்டும்' என்கிறது அந்த ஸ்லோகம். அஸ்வினியில் சூரியன் பிறந்ததால் பல கோடி வருடங்கள் சூரியன் சென்று கொண்டு இருக்கின்றான்.

**சைவ மஞ்சரி**

# சித்ரகுப்த விரதம்



சித்திரை மாத வைபவங்களில் மிக முக்கியமானது சித்ரகுப்த விரதம். சித்திரை மாத வளர்பிறை அல்லது தேய்பிறை சப்தமி அன்று, சூரியன் மேஷ ராசியில் பிரவேசிக்கும்போது, சித்திரகுப்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அதற்கு முதல் நாளான சஷ்டி அன்று உபவாசம் இருந்து அன்று இரவு கலச ஸ்தாபனம் செய்து வழிபட வேண்டும் என்கின்றன புராணங்கள். விரத நாளன்று அதன் மகிமையைச் சொல்லும் திருக்கதையைப் படிப்பது விசேஷம். அந்தக் கதை முருகப் பெருமானுக்கு சிவனாரால் அருளப் பெற்றது என்பார்கள்.

த்விஜவர்யர்' என்ற வேதியர் சகல சாஸ்திரவேதங்களிலும் தேர்ந்தவர். இருந்தாலும், அவற்றில் சொன்னவற்றை அவர் கடைப்பிடிப்பதில்லை. தான தர்மம் என்பது அவரைப் பொறுத்தவரை புத்தகங்களில் மட்டும்தான்!

இப்படியெல்லாம் இருந்தாலும் அவரிடம் ஒரு நல்ல குணமும் இருந்தது. அவர் சாப்பிடுவதற்கு முன்னால், ''சித்ராய நம: சித்ரகுப்தாய நம: யமரூ பிதராய நம:'' எனச் சொல்லி சித்திரகுப்தருக்கு பலி போடுவார். பிறகுதான் சாப்பிடுவார். த்விஜ வர்யரின் மனைவி சோமாவும் நல்லதே நினைத்தது இல்லை. ஆனால், சித்திரகுப்தருக்கு உணவு இடும்போதெல்லாம் த்விஜவர்யர், சோமாவையும் கூடவே வைத்துக் கொண்டதால், அவளுக்கும் பலன் கிடைத்தது. அவர்கள் இருவரும் இறந்த பிறகு, அவர்களை யமதர்மன் முன் நிறுத்தினார்கள். சித்திரகுப்தன், ''இவர்கள் சித்திரகுப்த விரதம் இருந்தார்கள்!'' என்றான்.

''இந்த இருவரையும் வைகுண்டத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்!'' என்றான் யமன். விரதத்தை அறியாமல் செய்த அவர்களுக்கே அப்படியென்றால், அறிந்து செய்பவர்கள் அடையும் பலனைச் சொல்லவும் வேண்டுமா?!

# கெத்தாராம ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய வருஷாபிஷேகம்

## 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ரதபவனி

கொழும்பு 14, கிரேண்ட்பாஸ், கெத்தாராம சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (முனியப்பர்) ஆலயத்தின் 12ஆவது ஆண்டு வருஷாபிஷேக பெருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நேற்று மாலை அபிஷேகம் மற்றும் வசந்தமண்டப பூஜை என்பன இடம்பெற்றன.



இதேபோல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு தினமும் மாலை வேளையில் அம்பாளுக்கு அபிஷேகமும் வசந்தமண்டப பூஜையும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு கற்பூரச் சட்டி ஊர்வலமும் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மாவிளக்கு பூஜையும் இடம் பெறும்.


எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கொழும்பு 12, ஆமர்வீதி பெரடைஸ் பிளேஸ் ஸ்ரீ பத்ரகாளியம்மன் திருக்கோவிலிருந்து பாற்குட பவனி ஆரம்பமாகும். இந்த பாற்குடபவனி ஆமர்வீதி, கிரேண்ட்பாஸ் வீதி, டொக்டர் பாபபுள்ள பிளேஸ் வழியாக ஆலயத்தை அடைந்ததும் அம்பாளுக்கு 1008 சத சங்காபிஷேகம், பாலாபிஷேகம் என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ரதபவனி இடம்பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு திருவூஞ்சல் திருவிழாவும் கொடியிறக்கமும் இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவனமும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் இடம்பெறும்.

**திருமதி பவானி சிவா**
**அறநெறி ஆசிரியர்**

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 82

அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப்பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.



தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது. ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக் கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல் விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்தும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும்.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**19947) சக்தியூட்டப்பட்ட மந்திர தந்திர சக்திகளைக் கொண்டவை எவை?** யந்திரங்கள்

**19948) சக்தியூட்டப்பட்ட எந்திரங்களில் யார் குடி கொண்டு இருக்கின்றார்கள்?**

பல தேவதைகள்

**19949) யந்திரங்களில் மிகவும் உயர்ந்ததும், சாமான்யங்களினால் எளிதில் வணங்கப்படக் கூடிய யந்திரம் எது?**

ஸ்ரீ சக்ரம்

**19950) ஸ்ரீ சக்ரத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?**

ஸ்ரீ சக்ர பூர்ண மகாமேரு

**19951) சில குறிப்பிட்ட காரண காரியங்களுக்காக ஸ்ரீ வித்யா பூஜை என்ற பெயரில் விஸ்தாரமாக செய்வது எதனை?**

ஸ்ரீ சக்ர பூர்ண மகாமேரு

**19952) ஸ்ரீ சக்கரம் என்பது என்ன?**


ஆதிபராசக்தியின் சூட்சும ரூபமாகும். ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் உள்ள பிந்துவில் அவள் சூட்ஷம வடிவில், ஸ்தூல ரூபமாக அமர்ந்திருக்க, அவளை காரண வடிவத்தினால் அதாவது மந்திர ஒலியினால் பூஜிக்க வேண்டும்.

**19953) பொதுவாக ஸ்ரீ சக்கரம் என்பது என்ன?**

பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் இணைந்து அமர்ந்து உள்ள இடமாகும்.

**19954) அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த தேவியை உபாசித்தோ அல்லது முறையான பூஜை செய்தோ அந்த தேவியின் அருளை பெறுகின்றவர்கள் என்ன நன்மை பெறுவார்கள்?**

வெகு காலம் ஜீவித்து இருப்பார்கள்.



**19955) கல்பத்துக்கு முடிவு ஏற்பட்டால் என்ன நடக்கும்?**

கல்பத்துக்கு முடிவு ஏற்பட்டாலும், அவர்களுடைய ஆத்மாவுக்கு (ஜீவனுக்கு) முடிவில்லை.

**19956) இவர்களை எவ்வாறு அழைப்பார்கள்?**

கல்ப ஜீவிகள்.

**19956) ஸ்ரீ சக்கர உபாசனையின் மகிமை என்ன?**

உருவமுள்ள எந்த பொருளுக்கும் அழிவு உண்டு. ஆனால் உபாசகர்கள் சரீரம் என்ற உருவத்துடன் இருந்தவாறு அவளை உபாசித்து அவளது அருளை பரிபூரணமாக பெற்று விட்டால், அவர்களுடைய சரீரம் அழியலாம், ஆனால் அவர்கள் ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதே ஆகும் என்பது ஐதீகம்.

**19957) அதைப்பற்றி கூறும் சுலோகம் எதில் உள்ளது?**

சௌந்தர்யலஹரியில் சுலோகம் 99 தின் தாற்பர்யத்தில் கூறப்பட்டு உள்ளது.

**19958) அதை போலவேதான் ஸ்ரீ சக்கர தேவியின் பெருமையையும், மேன்மையையும் கூறும் லலிதா சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு ஸ்லோகத்தையும் அனுதினமும் படித்து, தேவியை பூஜிக்கும் சாமானியர்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்?**

சர்வ சௌபாக்கியமும் கிட்டும் என்பதும் உண்மை ஆகும். அவர்களது வீடுகளில் உள்ள துர்தேவதைகள் ஓடி ஒளிந்து கொள்ளும், வியாதிகள் விலகும், சத்ருக்கள் அழிவார்கள், மன அமைதி கிடைக்கும்.

**19959) ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான எது இல்லை?**

யந்திரம்

**19960) ஸ்ரீ வித்யாவுக்கு நிகரான எது இல்லை?**

மந்திரம்

**19961) பலருக்கும் ஒரு சந்தேகம் உண்டு. ஸ்ரீ சக்கரமும், ஸ்ரீ மஹா மேரு எனப்படும் யந்திரமும் ஒன்றேதானா இல்லை வெவ்வேறானவையா என்பதே அந்த சந்தேகம்?**

உண்மை என்ன என்றால் இரண்டுமே ஒன்றுதான். ஸ்ரீ மஹா மேருவின் சமதளப்படுத்தப்பட்ட வடிவமே ஸ்ரீ சக்கரம் என்பதாகும்.

**19962) ஸ்ரீ சக்கர யந்திரத்தை கோடுகளாக வரைந்தால் அது என்ன?** ஸ்ரீ சக்ரம்

**19963) ஸ்ரீ சக்கர யந்திரத்தை கோடுகளாக வரைந்து அதற்கு மலை போன்ற அடுக்கடுக்கான நிலையிலான முப்பரிமாண உருவ வடிவம் கொடுத்தால் அது என்ன?**

ஸ்ரீ மஹா மேரு என கூறப்படும்.

**19964) பார்வைக்கு சாதாரணக் கோடுகளும் முக்கோணங்களுமாகத் தெரியும் ஸ்ரீசக்கரம் என்ன மகிமைக் கொண்டது?**

ஆதிபராசக்தியின் இருப்பிடம் மட்டுமன்றி, சர்வசக்தியும் இதில் அடக்கம் என்பதே இதன் மகிமை.

# விஷுக்கனி

பங்குனி மாதக் கடைசி நாள் இரவில், தங்க வெள்ளி நாணயங்கள், ஆபரணங்கள், நவரத்தினங்கள், பழ வகைகள், காய் வகைகள், புத்தாடை, முகம் பார்க்கும் கண்ணாடி, தேங்காய் ஆகியவற்றை பூஜையறையில் அழகாக அலங்கரித்து வைப்பர். மறுநாள் அதிகாலையில் எழுந்ததும், அந்த மங்கலப் பொருட்களைத்தான் முதலில் பார்ப்பார்கள். இது 'விஷுக் கனி' (விஷுக் காட்சி) எனப்படுகிறது. பிறகு கண்ணாடியில் முகம் பார்ப்பார்கள். சிறியவர்கள், பெரியவர்களுக்கு நமஸ்காரம் செய்வார்கள். அவர்களைப் பெரியவர்கள் ஆசிர்வதிப்பார்கள். அன்றைய தினம் வயதில் சிறியவர்களுக்கும் வீட்டுக்கு வருபவர்களுக்கும் பணம் பரிசளிக்கும் வழக்கம் உண்டு. இதை 'விஷுக் கை நீட்டம்' என்பர்.

# முட்டை விலை 35 ரூபாவாக குறையும்



ஏப்ரல் மாதத்தில் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக் குறைக்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். உள்ளூர் கோழி முட்டை உற்பத்தி மொத்த தினசரி தேவையை விட அதிகமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சராசரியாக நாட்டில் நாளொன்றுக்கு 65 இலட்சம் முட்டைகள் தேவைப்படுகின்றன. உள்ளூர் கோழிப்பண்ணைகளில் முட்டை உற்பத்தி ஏற்கனவே 75 இலட்சத்தை தாண்டியுள்ளது.இது குறித்து விவசாய அமைச்சு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு அறிவித்துள்ளது. நாட்டிலுள்ள கோழிப் பண்ணைகளில உள்ள தாய்க் கோழிகளின் எண்ணிக்கை 135,000 ஐத் தாண்டியுள்ளது.

சகலகோழிப் பண்ணைகளிலும் குஞ்சுகளின் கொள்ளளவு நூறு வீதத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதனால்,கோழி முட்டையின் விலை 45 50 ரூபாவாக உள்ளது.

# முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் மர்ஹூம் நஜ்முதீனின் நினைவுப் பகிர்தல்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் மர்ஹூம் கே.எம். நஜ்முதீனின் நினைவுப் பகிர்தல்' நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று கடற்கரை தனியார் விடுதியில் பேராசிரியர் எஸ்.ஏ. ரவூப் தலைமையில் நடைபெற்றது. 'திறந்த சமூகத்தில் புத்திஜீவிகளின் பங்களிப்பு' என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.ஏ.ரவூப், கல்வி சமூகத்திற்கு மர்ஹூம் நஜ்முதீன் சேர் செய்த பங்களிப்புக்கள்,பணிகளை நினைவுகூர்ந்தார். ஓய்வு நிலை கல்வி அதிகாரிகள், கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், இலக்கியவாதிகள், உலமாக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மர்ஹூம் நஜ்முதீன் சேரின் பங்களிப்புகளை நூலாக ஆவணமாக்குதல், அவர் பெயரில் நூல்களை பொது நூலகங்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அன்பளிப்புச் செய்தல் குறித்து சிறாஜ் மஸ்ஹூர் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

# பாணந்துறை, எழுவிலை அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த இப்தார்



பாணந்துறை, எழுவிலை அஹதிய்யாப் பாடசாலையின் வருடாந்த இப்தார் நிகழ்வு இவ்வருடமும் அஹதிய்யா நிர்வாகக் குழுவினரான என். ஏ.எம். ரிப்தி, எம்.பி.எஸ். வாரிஸ் (ஜே.பி), ஜீ.ஏ.எப். சஹ்லினா ஆகியோரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அலவியா முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அஹதிய்யா சம்மேளன பிரமுகர்கள், பிராந்திய அஹதிய்யா பாடசாலை அதிபர்கள், வயக்கடை ஜும்மா மஸ்ஜித் நிர்வாக சபை உறுப்பினர்கள், மற்றும் அலவியா முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் இப்னு உமர் கலாபீட விரிவுரையாளர் இஹ்ஷான் மௌலவி சிறப்புரை நிகழ்த்தினார்.

## நாடு சீர்குலைய...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் நேற்று முனதினம் (30) தங்காலை நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒரு அரசாங்கம் கவிழ்ந்தால் அதனை மீட்டுவிடலாம், ஆனால் ஆட்சி கவிழ்ந்தால் அதிலிருந்து மீள்வது மிகவும் கடினம் என்று தெரிவித்த அவர், அதனால்தான், கோட்டாபய ராஜபக்ஷ போராட்டத்தை ஆயுதங்களால் அடக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக, 2015க்குப் பிறகு நியமிக்கப்பட்ட பல அரசாங்கங்கள் நாட்டின் வளர்ச்சி இலக்குகளை அடையத் தவறிவிட்டன. பின்னர் மீண்டும் கோட்டாபய ராஜபக்ச தலைமையில் அரசாங்கத்தை ஆரம்பித்தோம், ஆனால் அது பல்வேறு சதிகாரர்களால் அழிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். அண்மையில், மத்தள விமான நிலையம் தனிமைப்படுத்தப்பட்ட போது நாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். சிறை சென்றோம். அதற்காக இப்போதும் மத்தள விமான நிலையத்தை தனியார் மயமாக்குவது பற்றி மீண்டும் கலந்துரையாடி வருகின்றோம். நாம் விமான நிலையத்தை அமைத்தமை நெல்லை சேமித்து வைப்பதற்காக அல்ல. இதேபோன்று துறைமுகம் அமைக்கப்பட்டமை தங்களுடைய சொந்தத் உடைமை மாற்றத்திற்காக அல்ல. அதிவேக நெடுஞ்சாலை உணவை கொண்டு செல்வதற்காக அமைக்கப்படவில்லை. முகப்புத்தகத்தில் படங்களை போடுவதற்காக நாங்கள் தாமரை கோபுரத்தை அமைக்கவில்லை. நாட்டின் அபிவிருத்தியை முன்நிலைப்படுத்தியே எமது அரசாங்கத்தின் கீழ் இவற்றை ஆரம்பித்ததாகவும் அவர் கூறினார்

## பதவி நீக்கத்துக்கு எதிராக...

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர: கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி கூட்டத்தின் இறுதியில் எம்மை கட்சியில் இருந்து நீக்குவதற்காக தீர்மானம் கொண்டு வந்தார். இதற்கு நான்கில் ஒருபகுதியினர் கூட கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவிக்கவில்லை. இது குறித்து கருத்து தெரிவிக்க அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். எங்கள் கருத்துக்களை தெரிவிக்க எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இதற்கு அங்கிருந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களின் எதிப்புக்கு மத்தியில் அவர் வெளியேறினார். இது முற்றிலும் சட்டவிரோதமான நீக்கம். ஒரு குற்றச்சாட்டு கூட முறையாக இல்லை. இந்த நாட்களில், அவரது நடத்தை பற்றி எங்களுக்கு கேள்வி உண்டு. அவர் பேசும் கதைகளில் பிரச்சினைகள் உள்ளன . முன்னாள் ஜனாதிபதிக்கு ஏதோ மன நல பிரச்சினை இருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை, கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண பேசுகையில்,

என்னை பொருளாளர் பதவியில் இருந்து நீக்குவதற்காக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு, கூட்டணியை அமைக்கும் விடயத்தில் நான் சரியாக செயல்படவில்லை என்பதுதான்.

இந்தக் கூட்டணிகளை உருவாக்கிய அனைத்துக் கட்சிகளுக்கும் உள்ள பிரச்சினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரின் தலைமைத்துவத்தை சபைக்குள் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற பிரச்சினை மாத்திரமே. அதற்கு என்னால் செய்யக்கூடியது எதுவுமில்லை.

இன்று விசேட கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இது போன்ற சிறப்புக் கூட்டத்தில் இதுபோன்ற முடிவுகளை எடுக்க முடியாதென்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவும்இங்கு கருத்து தெரிவித்தார்.

இதேவேளை, சம்பவ தினம் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வகித்த சகல பதவிகளிலிருந்தும் கட்சியின் தலைவர் நீக்கியுள்ளார்.

இதற்கமைவாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக கடமையாற்றிய அமைச்சர் மஹிந்த அமரவீர அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதேபோன்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வகித்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவும், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண வகித்த பொருளாளர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் கூட்டம் அண்மையில் (30) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது இப்பதவி நீக்கம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த நீக்கம் கட்சியின் அரசியலமைப்புக்கு எதிரான தன்னிச்சையான நடவடிக்கை என்று பதவி நீக்கப்பட்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மூன்று உறுப்பினர்களையும் பதவியிலிருந்து நீக்குவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, செயற்குழு போன்றவற்றின் அங்கீகாரம் இதற்காக பெறப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த பதவி நீக்கம் ஒரு தன்னிச்சையான செயல். இக்கூட்டம் நடைபெற்ற போது ஐம்பதுக்கும் மேற்பட்ட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் பஸ்ஸில் அழைக்கப்பட்டமையும் கூட பிரச்சினைக்குரிய விடயமாகும் என்றும் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும் விசேட கூட்டத்தில் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுக்க முடியாது. இது கட்சியின் அரசியலமைப்பை மீறும் செயலாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களும் இன்று நீதிமன்றத்திற்கு செல்ல உள்ளனர். மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுக்களிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதே இதன் நோக்கம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## மது அருந்தும் போட்டியில்...

தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.தோட்டத்திலுள்ள ஆலயத்தில் (27) வருடாந்த தேர் திருவிழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் சிலர் அதிகளவு மது அருந்துபவர்களை தெரிவு செய்யும் போட்டியை நடத்தியுள்ளனர்.

அதே தோட்டத்தில் வசிக்கும் 03 பேர் இப்போட்டியில் கலந்து கொண்டனர். இவர்களுக்கு 750 மில்லிலீற்றர் மது போத்தல்கள் மூன்று வழங்கப்பட்டுள்ளன.குறைந்த நேரத்தில் மது போத்தல் மூன்றையும் அருந்துபவரை வெற்றியாளராக தேர்வு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு முன்வந்த மேற்படி நபர், ஏற்கனவே அதிகளவு மது அருந்தியிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் மூத்த மகள் தெரிவிக்கையில், இரவு வீட்டுக்கு வந்த தந்தை இரவு உணவருந்திவிட்டு நித்திரைக்கு சென்றார். மறுநாள்(28) அதிகாலை அவர் எழுந்திருக்க வில்லை. நித்திரையிலேயே உயிரிழந்ததாக தெரிவித்துள்ளார்.

போட்டியில் கலந்துகொண்ட மற்றொருவர் மிகவும் சுகவீனமடைந்த நிலையில் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனையின் போது, நிமோனியா காய்ச்சல் மற்றும் கழுத்து நரம்பில் உணவு அடைப்பு ஏற்பட்டமையே மரணத்துக்கு காரணம் என சட்ட வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் உடலின் பல பாகங்கள் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நாட்டில் முதலாவது AI...

திரைப்படத்தை தயாரிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் (30) நடைபெற்ற 20 ஆவது ரைகம் டெலிஸ் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பிரபல தொழில் அதிபரான Kingdom of Raigam குழுமத்தின் தலைவர் கலாநிதி ரவி லியனகேயின் ஆலோயோசனையின் அடிப்படையில், ரைகம் டெலிஸ் தலைமைச் செயலகம் ஆண்டுதோறும் இந்த விருது விழாவை ஏற்பாடு செய்து வருகிறது.

2023 ஆம் ஆண்டில் திரையிடப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள், ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்யும் வகையில் ஏழு பிரிவுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட விருதுகள் இங்கு வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ரைகம் சிறப்பு பிரணாம விருதுகள் வழங்க இணைந்து கொண்டதுடன் மூத்த கலைஞர்களான அத்துல ரன்சிறிலால், கிவந்த அர்த்தசாத் மற்றும் கிரேஸ் தென்னகோன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் "ரைகம் பிரதீப பிரபா" கௌரவ விருது கலாநிதி ரோஹண வீரசிங்கவிற்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டதுடன், இந்த ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக நடிகராக மூத்த நடிகர் மகேந்திர பெரேராவும், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக நடிகைக்கான விருது திருமதி சேமினி இத்தமல்கொடவுக்கும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

அத்துடன், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக இயக்கம் மற்றும் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடகமாகவும் பிரசன்ன ஜெயக்கொடி இயக்கிய வசந்த கன்னங்கரவின் தயாரிப்பில் உருவான "எயா தென் பெந்தலா" என்ற தொலைக்காட்சி நாடகத்திற்கும் விருது வழங்கப்பட்டது.

ஆண்டின் சிறந்த ஊடக நிகழ்ச்சி அலைவரிசையாக ஹிரு டி.வி மற்றும் சிரச தொலைக்காட்சி ஆகிய தொலைக்காட்சி அலைவரிசைகள் ஜனாதிபதியிடமிருந்து கூட்டு விருதுகளைப் பெற்றதுடன், ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி நாடக அலைவரிசையாக மற்றும் ஆண்டின் சிறந்த தொலைக்காட்சி அலைவரிசை என்ற இரண்டு விருதுகளையும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் பெற்றது. இந்த விருது வழங்கும் நிகழ்வு பிரபல பாடகர்கள் மற்றும் நடிகர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் வண்ணமயமாக நடைபெற்றது

## சமூக ஊடகங்களில்...

இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில், 1500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் கணினி குற்றப் பிரிவு கூறியுள்ளது.

இவற்றில், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பேஸ்புக் ஊடான மோசடிகளே அதிகரித்துள்ள தாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில், இணையத்தளம் ஊடான மோச டிகள் தொடர்பான முறைப்பாடுகளில், சற்று அதிகரிப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரிகளுக்கான வருமான வரம்பு...

தற்போது இறைவரித் திணைக்களத்தில் 12,000 முதல் 13,000 வரையிலான வற் வரி கோப்புகள் உள்ளன. இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 50,000 த்தை தாண்டுமென்றும் அரசாங்க வருமான வரித்துறை ஊகித்துள்ளது.

இந்நிலையில் 60 மில்லியன் ரூபா வருடாந்த வருமானம் ஈட்டும் அனைத்து நபர்களும் வரி செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

## பாதாள உலக கும்பலை...

உத்தியோகத்தர்களை உள்வாங்குவதற்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவு செய்யப்பட்ட 100 பேர் தற்காலிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையில் இணைக்கப்பட்டு தேவையான பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பாதாள உலகக் குற்றச் செயல்களை முறியடிப்பதற்காக தற்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 20 குழுக்களுக்கு மேலதிகமாக, இந்த மோட்டார் சைக்கிள் படை அணியும் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை இந்திய சமுதாய...

தொண்டமான் தெரிவானார். இந்நிகழ்வில் இலங்கை இந்திய சமுதாய பேரவையின் காப்பாளரும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளருமான குமார் நடேசன், அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துவதை காணலாம்.

# இன்றைய பலன்கள்

(00.00.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** சிறு சிறு தொழில்கள் உண்டாகும். இருப்பினும் உங்கள் முயற்சியால் நல்ல மாற்றத்தை நோக்கி செல்வீர்கள்.

**ரிஷபம் :** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத தன லாபம் வந்து சேரும். நகைச் சுவை சம்பந்தப்பட்ட பணியில் இருப்பவர்கள் திடீர் புகழை அடைவார்கள்.

**மிதுனம் :** கொஞ்சம் தொல்லைகளையும் பின்னர் நன்மைகளையும் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இடம் மாற்றமோ பதவி மாற்றமோ வந்து சேரும் .

**கடகம் :** இதுவரை உங்களுக்கு இருந்து வந்த எதிரிகளின் தொலை விலகும். உங்கள் பொருளாதார முன்னேற்றத்தில் இருந்த தடைகள் அகலும்.

**சிம்மம் :** அதிக தொல்லைகள் இல்லாத வாரமாக இந்த வாரம் அமையும். குடும்பத்தில் குழப்பங்கள் குறைவதற்கான வழி பிறக்கும். சில தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி :** உங்களுக்கு பெரும்பாலும் நன்மைகளை ஏற்படும் வாரம் இது. இதுநால் வரைக்கும் உங்களுக்கு இருந்த வெளிநாட்டு பயணத்தடை விலகும்.

**துலாம் :** நன்மைகள் கூடுதலாகவும் சிரமங்கள் குறைவாகவும் இருக்கக்கூடிய வாரம் இது. சிரமங்களையும் கூட திறம்பட சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம் :** அரசு மற்றும் அரசு சார்ந்த பணி செய்பவர்கள் நல்ல மாற்றங்களை சந்திக்க போகிறீர்கள். காவல் துறையில் பணியாற்றும் நபர்களுக்கு சாகசங்கள் நிறைந்த வேலை வந்து சேரலாம்.

**தனுசு :** உங்களுக்கு பலவிதமான நன்மைகள் ஏற்படும் மகத்தான வாரம் இது. என்றாலும் பூமி சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் தேவை.

**மகரம் :** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு ஏற்றம் மிகு வாரம் இது. தங்க நகை வியாபாரம் செய்பவர்களுக்கு அதை வாங்கி விற்பவர்களுக்கும் அனுகூலமான காலமாகும்.

**கும்பம் :** உங்கள் செயல்கள் சிலவற்றில் தடுமாற்றத்தை சந்திப்பீர்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் குடும்ப சூழ்நிலை மன சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

**மீனம் :** வியாபாரம் அனைத்தும் நன்மையாக மாறும். உடல் நலனில் சிறுசிறு பாதிப்புகள் தென்பட்டாலும் அது பற்றி கவலைப்பட வேண்டாம்.

## செவ்விளநீர் ரக செய்கையில்... (03 ஆம் தொடர்ச்சி)

அதற்கேற்ப, கொழும்பில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த விவசாயப் பொருட்களின் சந்தையை மீகொட பொருளாதார மத்திய நிலையம் ஊடாக ஹோமாகம பிரதேசத்துக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் முயற்சி செய்துள்ளோம்

நாடு முழுவதும் அவ்வாறான பல பொருளாதார மையங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் வசிக்கும் 850க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு முறையான வழிகாட்டல்களை வழங்கியதன் மூலம், இந்த செவ்விளநீர் பயிர்ச்செய்கையை ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் செய்கை பண்ணுவதற்கான சகல வசதிகளும் கிடைத்துள்ளன. மீகொட பொருளாதார மத்திய நிலையத்தின் ஊடாக அவற்றை சேகரிக்கும் வசதி உள்ளது.

கிராமிய கைத்தொழில் அமைச்சராக நான் நிறுவிய, பானலுவ கைத்தொழில் கிராமத்தில் செவ்விளநீரை ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலையொன்று அடுத்த சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தேவையான தரத்தில் செவ்விளநீரை உற்பத்தி செய்யும் வசதி இப்பகுதியில் உள்ளது.

செவ்விளநீர் தொழில்துறையில் இலங்கையின் மிகப்பெரிய போட்டியாளராக தாய்லாந்து உள்ளது. இவர்களின் தேங்காய் தண்ணீர் மற்றும் செவ்விளநீர் தண்ணீர் குறைந்த விலையில் கூடுதல் மதிப்புடன் வெளிநாட்டு சந்தைகளில் விற்கப்படுகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் தண்ணீர் மற்றும் செவ்விளநீர் நீரை ஒரு முன்னணி நிறுவனம் மட்டுமே வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கிறது. ஏற்றுமதிக்கான சந்தையை தயார்படுத்தும் போது போக்குவரத்து போன்ற காரணிகளில் கவனம் செலுத்தி, விரிவான ஆய்வு நடத்தி, குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய ரகங்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். புதிய தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பொதிக்கான முறைகளைப் பயன்படுத்துவதும் முக்கியம் என்றார்.

தெங்கு பயிர்செய்கை சபையின் தலைவர் கலாநிதி மாதவி ஹேரத், பொது முகாமையாளர் அகில விஜேசிங்க, ஹோமாகம பிரதேச செயலாளர் பி.ஏ.டி.சிந்தக, உள்ளூராட்சி அதிகாரிகள், விவசாய அமைப்புக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகள் கலந்துகொண்டனர்.

## பாராளுமன்ற தேர்தல்...

தற்போது,மக்கள் ஆணையில்லாதவர் களால் கையாளப்படுகின்றன. எனவே, காலம் தாழ்த்தாமல் உரிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.போலிப் பெரும்பான்மை மூலம் தேர்தல்களை பிற்போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின், மக்கள் போராட்டம் வெடிக்கும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## சில பிரதேசங்களுக்கு...

சில இடங்களில் வெப்பச் சுட்டெண், மனித உடலில் உணரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'எச்சரிக்கை நிலை' வரை வெப்பம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இயற்கை அபாயங்கள் ஆரம்ப மையம் எச்சரித்துள்ளது.

## சந்தைக்கு புதிய வகை...

குறிப்பிட்டுள்ளார். நெல் கொள்வனவு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் 37 நெல் களஞ்சியசாலைகள் திறக்கப் பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலிருந்து மாத்திரமே,நெல் பெறப்படுவதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல் கொட மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடுள்ள நிலையில்...

ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமாகிய நா.மதிவண்ணன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்து சிறப்பித்தார்.இங்கு உரையாற்றிய போதே அவர், இவ்வாறு குறிப்பிட்டார். இந்நிகழ்வின் விசேட அதிதியாக மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வீ. தங்கவேல், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி பிரிவு பொறுப்பாளர் க.வேல்வேந்தன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி மட்டக்களப்பு இந்துக்கல்லூரியிலிருந்து ஆரம்பமான பேரணி, தேவநாயகம் மண்டபம் வரை வந்தடைந்தது.

மங்கள விளக்கேற்றலுடன்,நடனக் கலைஞர்களின் வரவேற்பு நடனத்து நிகழ்வு ஆரம்பமானது.மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுத் துறைக்கு பங்காற்றிய மகளிருக்கு இராஜாங்க அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். சம்பள உயர்வு உள்ளிட்ட விடயங்கள் சிலவற்றைக் கோரி இராஜாங்க அமைச்சரிடம் மகஜர் ஒன்றும் இதன் போது கையளிக்கட்டது

# வடக்கின் உதயம்

# கிளிநொச்சி பாரதிபுரம் செபஸ்ரியார் வீதி பாலத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

## பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் பங்கேற்பு





ரூ. 15.3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்ட பாரதிபுரம் செபஸ்ரியார் வீதி பாலப் புனரமைப்புக்கான வேலைகள் நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரதிபுரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பாலமானது சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக உடைந்த நிலையில் காணப்படுவதனால் போக்குவரத்து தடைப்பட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச சேவைகளுக்கு செல்லும் அதிகாரிகள் என பலரும் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அதுமட்டுமன்றி மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சந்தை முதற்கொண்டு ஏனைய பல முக்கிய தேவைகளுக்கான போக்குவரத்து மார்க்கமாகவும் இப்பாலமும் அதனுடன் இணைந்த இவ்வீதியும் காணப்படுகிறது.

கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறை மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வீதிகள் மற்றும் கிராமிய பாலங்கள் செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப் பட்டு வரும் நிலையில், இப்பாலத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இப்பாலம் உடைவடைந்து போக்குவரத்து தடைப்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் மக்கள் பல மைல் தொலைதூரம் சுற்றி வரவேண்டிய சூழ்நிலையும் அதனுடன் இணைந்த கால தாமதங்களும் போக்குவரத்திற்கான செலவுகளும் அதிகரித்து காணப்பட்டன.

மக்களின் வேண்டுகோளை யேற்று இப்பாலத்தின் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுகளின் போது, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், அமைச்சின் மேலதிக செயலாளர் ரணவீர, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளம்) சூரியகுமார், மாகாண பணிப்பாளர் குரூஸ், கிளிநொச்சி மாவட்ட பிரதான பொறியியலாளர் அரந்தன், யாழ் மாவட்ட பிரதான பொறியியலாளர் இளங்கீரன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## யாழ். போதனா வைத்தியசாலை

# வெளி நோயாளர் பிரிவு மாலை 6.00 வரை செயற்படும்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, மாலை ஆறு மணி வரை செயற்படும் என யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தீர்மானங்களை அறிவித்து கருத்து தெரிவிக்கையில் இதனை அவர் தெரிவித்தார்.யாழ் போதனா வைத்தியசாலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வெளிநோயாளர் பிரிவில் அதிகளவில் சிகிச்சை பெறுவதற்கு வருகிறார்கள்.

அதன் காரணமாக வெளி நோயாளர் பிரிவை போயா தவிர்ந்த கிழமை நாட்களில் மாலை 6 மணி வரை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை, யாழ் போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு இடவசதி மற்றும் ஆளணி எமக்குள்ள ஒரு பாரிய சவாலாக விளங்குகிறது.

இருந்த போதும் எம்மிடம் காணப்படுகின்ற வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி சேவையாற்றி வருகின்றோம். எமது தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துரைத்துள்ளோம் என்றார்.

# மீசாலை கிழக்கு பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் (30) சனிக்கிழமை இரவு கஞ்சா போதைப்பொருள் பொதியுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து 5 கிலோ, 100 கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டிருப்பதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி மற்றும் பருத்தித் துறையைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கஞ்சாவுடன் கைதாகியுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற ஈஸ்டர் நள்ளிரவு திருப்பலி

## ஆலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு





**மன்னார் குறுப் நிருபர்**

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி (ஈஸ்டர்) மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் சனிக்கிழமை (30) இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கல் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலி இடம் பெற்ற போது ஆலயத்தை சூழ பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது.மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம் பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று (31) காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் உயிரிழந்த பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு அஞ்சலி



**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் அகிலேந்திரனுக்கு அஞ்சலி நிகழ்வு (30) மாஞ்சோலை வைத்திய சாலையில் மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறீ லங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் தலைவர் கஜேந்திரன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் தஞ்சயன் மற்றும் வைத்தியர்கள், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அரசாங்க தாதியர் உத்தியோகத்தர் சங்கம், பணியாளர்கள், ஊழியர்கள், என பலரும் விபத்தில் உயிரிழந்த வைத்தியர் கு. அகிலேந்திரனுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரையும் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் கு. அகிலேந்திரன் கடந்த 28 அன்று ஓமந்தையில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடி பொலிஸ் பிரிவில் யுக்திய சுற்றிவளைப்பு; 26 பேர் கைது

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

நெல்லியடிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துன்னாலைப் பகுதியில் இரவோடு இரவாக பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பில் ஆண், பெண் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுவரும் யுக்திய நடவடிக்கையின் ஒரு கட்டமாக இது இடம் பெற்றுள்ளது.

நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிசார் காங்கேசன்துறை இரண்டடுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலும், விசேட அதிரடி படையினரும் இணைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை (30) இரவு 9:00 மணியிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (31) அதிகாலை ஒரு மணி வரை இச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது. இதன்போது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட எட்டுப் பேர், மற்றும் மோதலில் ஈடுபட்ட ஒருவர் அடையாள அட்டை இன்றிய ஐவர் மேலும் சிறுகுற்றங்கள் புரிந்த ஆண், பெண் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுவை பண்பாட்டு பெருவிழா போட்டிகள்

**மாங்குளம் குறுப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவை மற்றும் புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவை இலண்டன் கிளை என்பன இணைந்து புதுக்குடியிருப்பில் ஏற்பாடு செய்துள்ள புதுவை பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 06ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளது

குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் மற்றும் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.இந்நிலையில் இந்த புதுவை பண்பாட்டுப் பெருவிழாவினை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட கலைஞர்களுக்கான பல்வேறு போட்டி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றனஅந்தவகையில் போட்டி நிகழ்வுகளின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் (30) புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் மாலைக்கு வாதாடிய மைந்தன் கூத்துப் போட்டியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் நாட்டார் பாடல், கும்மி , தனி நடனம், பாடல் போட்டிகளும் இடம்பெற்றன.



அதேவேளை நேற்று (31) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் பேச்சு போட்டி, சொற்சமர், சதுரங்க போட்டி உள்ளிட்ட போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த போட்டிகளில் வெற்றியீட்டும் கலைஞர்களின் கலை நிகழ்வுகள் எதிர்வரும் 06ஆம் திகதி இடம்பெறும்.


இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம்

சினிமா புத்தக வெளியீட்டுத் திட்டம் 2024

சினிமா கதை எழுதும் கலையினுள் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட மற்றும் புதிய சினிமா கதாசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் சினிமா புத்தக வெளிட்டுத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சினிமா கதாசிரியர்களின் கையெழுத்துப் பிரதிகளை வரவழைத்து அந்தப் பிரதிகளை வருடாந்தம் இரண்டு கட்டங்களாக கூட்டுத்தாபன பிரசுரமாக வெளியிடப்படும்.

விண்ணப்பப் படிவம், நிபந்தனைகள் மற்றும் இயைபுடைய விபரங்களை 077 6763344, 071 5212028 எனும் whatsapp இலக்கங்களுக்கு குறுஞ் செய்தியொன்றை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்

விசாரணைகள்: 0112-588773



விண்ணப்பங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024.06.28

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -7


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனி 2024.03.30 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5435 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,993,000.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 2 8 0 2 9 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 010 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 0 2 9 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3677 — சீட்டிழுப்பு திகதி 2024.03.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 72,175,431.36
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 13 22 60 72 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 94609

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1783 — 2024.03.30 — 08019 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 428,890,222.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 01 21 26 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.03.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0261
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 9 1 4 5 2 9 — L7 எழுத்து G
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 27,816,522.48

ராசி சுப பலன் — திகதி 2024.03.30 — சீட்டிழுப்பு இலக்கம் 744 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,675,262.44
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 09 19 24 53 — தனயோக இலக்கம் 24188 — நாளுக்கான விதி எண் 07

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1465 — 2024.03.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,643,069.28
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 14 30 44 49 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 22851

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளி 2024.03.29 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5434 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,908,488.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 5 9 2 8 6 7

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 009 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 2 8 6 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3676 — சீட்டிழுப்பு திகதி 2024.03.29 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 72,175,431.36
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 39 43 55 79 — விசேட எழுத்து U — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50622

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1782 — 2024.03.29 — 96246 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 428,890,222.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 21 49 65 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.03.29 — சீட்டிழுப்பு இலக்கம் 0260
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 6 1 0 9 9 2 — L7 எழுத்து L
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 27,816,522.48

ராசி சுப பலன் — திகதி 2024.03.29 — சீட்டிழுப்பு இலக்கம் 743 — செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,657,913.24
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 35 51 53 56 — தனயோக இலக்கம் 04344 — நாளுக்கான விதி எண் 06

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1464 — 2024.03.29 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,430,456.96
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 49 56 57 61 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 41767

# முஸ்லிம்களின் சமய, சமூக, கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தவர் மௌலவி ஏ.எல்.எம் இப்றாஹீம் (கபூரி)

இலங்கை முஸ்லிம் சமூகம், தங்களின் சமய, சமூக மறுமலர்ச்சிக்கும் குறிப்பாக கல்வி முன்னேற்றத்திற்கும் அர்ப்பணிப்புடன் உழைத்துவந்த அறிவாளுமையை இழந்திருக்கிறது. அவர் தான் பேராதனை, களனி பல்கலைக்கழகங்களின் முன்னாள் விரிவுரையாளரும், இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் முன்னாள் தலைவருமான மௌலவி ஏ.எல்.எம் இப்றாஹீம் கபூரி, (எம்.ஏ) ஆவார்.

கடந்த சனியன்று காலமான இவர், கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கும் முஸ்லிம்களின் சமய, சமூக, கல்வி மறுமலர்ச்சிக்கும் அளப்பரிய சேவைகளையும் பங்களிப்புகளையும் நல்கியுள்ளார்.

ஆரவாரமற்ற முறையில் அமைதியாகவும் அடக்கமான முறையிலும் பணியாற்றி வந்த இவர், எவ்வளவு தான் வேலைப்பளுவுக்கு மத்தியில் இருந்த போதிலும் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் சிரித்த முகத்துடன் பழகும் பண்பைக் கொண்ட எளிமைமிகு ஆளுமையாக விளங்கினார்.

தமது 87 வயதில் இவ் உலகை விட்டு பிரிந்துள்ள மௌலவி இப்றாஹீம், மாவனல்லை உயன்வத்தையில் 1937 ஆம் ஆண்டு பிறந்தவராவார். நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை கற்ற இவர், 1948 இல் கபூரிய்யா அறபுக் கல்லூரியில் இணைந்து சுமார் 9 வருடங்கள் கற்று 1957 ஆம் வருடம் அல்ஆலிம் அல்கபூரி பட்டத்தைப் பெற்று வெளியேறினார்.

அத்தோடு இலங்கை ஜமாஅதே இஸ்லாமியோடு தம்மை இணைத்து கொண்ட இவர், இஸ்லாமிய பணியிலும் இந்நாட்டு முஸ்லிகளின் மேம்பாட்டிலும் குறிப்பாக கல்வி முன்னேற்றத்திலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.

இந்தப் பின்புலத்தில் 1958 இல் இவர் ஜமாஅதே இஸ்லாமியின் பொதுச்செயலாளர் பதவிக்கு தெரிவானார். அவர் கபூரிய்யாவில் கற்கையை நிறைவு செய்து வெளியேறிய போதிலும் அங்கு இரண்டு வருடங்கள் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1959 இல் அறபு ஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்ட இவர், 1963 இல் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்தார்.

1968 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஜி.ஏ.கியூ. கற்கையையும் அதன் பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்ட படிப்பையும் நிறைவு செய்து முதல் தரத்தில் சித்தியடைந்தார். அதன் ஊடாக 1973 முதல் பேராதனை மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய நாகரிக மற்றும் அறபு கற்கைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

அதேநேரம், பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தை ஸ்தாபிக்கவென மர்ஹூம் நளீம் ஹாஜியார், அறிஞர் ஏ.எம்.ஏ அஸீஸ் தலைமையில் 10 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்திருந்தார். அக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவராகவும் இருந்த மௌலவி இப்றாஹீம் நளீமிய்யா கலாபீடத்தின் பாடத்திட்டத்தை வரைந்த முதல் நபரும் ஆவார்.



1976 – 77 காலப்பகுதியில் ஜமாஅதே இஸ்லாமியின் தலைமைப் பதவியை வகித்த இவர், 1987 இல் மேற்படிப்பிற்காக சவூதி அரேபியா சென்றார். அங்கிருந்து நாடு திரும்பிய பின்னர் 1989 முதல் 1992 வரையான காலப்பகுதியிலும் இவ்வமைப்பின் அமீராக மீண்டும் பதவி வகித்தார்.

ஜமாத்தே இஸ்லாமியின் அமீராக (தலைவர்) பதவி வகித்த காலப்பகுதியில் தப்ஹீமுல் குர்ஆன் என்ற அல் குர்ஆன் விளக்கவுரையை சிங்கள மொழியில் கொண்டுவருவதற்கு முன்னோடியாக செயற்பட்ட இவர், சிங்கள மொழி மொழிபெயர்ப்புடன் அல்குர்ஆனையும் அதே போன்று அல் குர்ஆன் விளக்கவுரையையும் வெளிக்கொணரவும் அயராது உழைத்தார்.

மேலும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்காக ஆரம்பம் முதல் அளப்பரிய பங்களிப்புக்களைய நல்கியுள்ள இவர்,


மாதம்பை இஸ்லாஹிய்யா ஆண்கள் கல்லூரி, புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் கல்லூரி, மாவனல்லை ஆயிஷா சித்தீகா மகளிர் கல்லூரி, ஒட்டமாவடி பாத்திமதுஸ் ஸஹ்ரா கல்லூரி என்பவற்றின் ஸ்தாபக முன்னோடி உறுப்பினராக விளங்குகிறார். அத்தோடு சிங்கள மொழி மூலமான முதலாவது இஸ்லாமிய கற்கை நிறுவனமான தன்வீர் அகடமியின் ஸ்தாபகரும் ஆவர் இவர். இவை மாத்திரமல்லாமல் நிகவெரட்டிய அமீனிய்யா அறபுக் கல்லூரி, ஹெம்மாதகம தாருல் ஹஸனாத் கல்லூரி என்பவற்றின் உருவாக்கத்திலும் இவரது பங்களிப்பும் வழிகாட்டல்களும் இருந்துள்ளன.

அதேவேளை தமது பல்கலைக்கழக ஆசிரியப் பணியின் போது ஆற்றல்களும், அறிவும் நிறைந்த பல புத்திஜீவிகளின் உருவாக்கத்திற்கு பங்களிப்புக்களை நல்கியுள்ள இவர், பெண்களுக்கான கல்வியை நவீன மயப்படுத்துதல், ஆங்கிலம், நவீன தொழில் நுட்பம் உடையதாக அதை மாற்றியமைத்தல், முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இந்நாட்டின் பெரும்பான்மை சமூகத்தின் மொழியான சிங்கள மொழியில் பரீட்சயம் கொண்ட மார்க்க அறிஞர்களை உருவாக்குதல், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையை மிகவும் ஆளுமையும், ஆற்றலும் கொண்டதாக மாற்றுதல் எனப் பல மட்டங்களிலும் தம் பங்களிப்புக்களை அளித்துள்ளார். அதேநேரம், திஹாரியில் அமைந்துள்ள இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக விளங்கியுள்ள இவர், சவூதி அரேபியாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச இஸ்லாமிய இளைஞர் அமைப்பினதும் குவைத் சர்வதேச இஸ்லாமிய நலன்புரி அமைப்பினதும் ஸ்தாபக உறுப்பினருமாவார்.

அத்தோடு பல சர்வதேச இஸ்லாமிய அமைப்புக்களிலும் மாநாடுகளிலும் இலங்கை முஸ்லிம்களை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ள இவர், ஒரு அறிஞராகவும் புத்திஜீவியாகவும் கல்விமானாகவும் மாத்திரம் இருந்துவிடாது ஒரு சமூக செயற்பாட்டாளராகவும் தான் பெற்றுக்கொண்டுள்ள அறிவை அமுலாக்கம் செய்வதில் மிகப் பெரும் செயல் வீரராகவும் திகழ்ந்துள்ளார். அன்னாரின் சேவைகளும் பணிகளும் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும் என்பதில் ஐயமில்லை. பிரதியுபகாரம் எதிர்பாராது நாட்டினதும் குறிப்பாக முஸ்லிம்களதும் சமய, சமூக, கல்வி மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்புக்களை நல்கியுள்ள இப்றாஹீம் மௌலவியின் தவறுகள் மன்னிக்கப்பட்டு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற உயரிய சுவர்க்கம் அவருக்கு கிடைக்கப் பெற்றிட இறைவனிடம் பிரார்த்திப்பது சமூகத்தின் பொறுப்பாகும்.

**மர்லின் மரிக்கார்**

# மலைச்சாரல்





கண்டி பன்விலை விக்னேஸ்வரா விஞ்ஞான கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் ( 30. 03. 2024 ) பக்தி பூரவமாக அதிபர் கோபாலகிருஷ்னன் தலைமையில் நடைபெற்றது. கிரிகைகள் அனைத்தையும் சாதக சிரோன்மணி சத்தியஜாத சிவாச்சாரியார் ஜெ. கு. ஜனேந்திரராஜா குருக்கள் மற்றும் ஏனைய குருமார்கள் இணைந்து நடாத்தினர். நிகழ்வுகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் வர்த்தக பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## சிவனொளிபாத மலைக்கு

## போதைப்பொருட்களுடன் வழிபட வந்த ஆறு இளைஞர்கள் கைது

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

பல்வேறு போதைப்பொருட்களுடன் சிவனொளிபாத மலைக்கு வழிபட வந்த ஆறு இளைஞர்கள் வட்டவளை மற்றும் நல்லதண்ணி பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 30ஆம் திகதி ஆப்ரேஷன் ஜஸ்டிஸ் உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், இவர்கள்கைதை செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த வட்டவளை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், கடந்த 30 ஆம் திகதி, நீதி நடவடிக்கையுடன் இணைந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்கள் செல்லும் வாகன சோதனையின் போது, பல்வேறு போதைப் பொரு ட்களை கொண்டு சென்ற நான்கு இளைஞர்கள் வட்டவளை பகுதியில் நடத்தப்பட்ட வீதி தடை சோதனையின் போது கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நல்லதண்ணி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், கஞ்சா மற்றும் போதைப்பொருளை எடுத்துச் சென்ற இரு இளைஞர்கள் நல்லதண்ணி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக

## மாணிக்கக்கற்கள் அகன்ற எழு பேர் கைது

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற ஏழு பேர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் என ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

20 வயதுக்குட்பட்ட இளைஞர் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசமொன்றில் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்றபோது நோர்வூட் பொலிஸாரால் கைதாகியுள்ளார் எனவும் ஏனைய 6 பேர் ரொசல்ல பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்றவேளையில் ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்களை நாளை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் பன்மூர் தமிழ் மகாவித்தியாலய உயர்தர மாணவி சுதர்சனா பங்கேற்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**



இலங்கையின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பன்மூர் தமிழ் மகா வித்தியாலய உயர்தர மாணவி K.சுதர்சனா கலந்து கொண்டு பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இலங்கையின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் இவர் கலந்து கொண்டார்.

இவர் பன்மூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அதன்பின்னர் வலய மட்டத்தில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் மாகாண மட்ட ரீதியில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவருக்கு கல்வி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இறுதியாக தேசிய ரீதியில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தலில் உறுப்பினராக அங்கத்துவம் பெற்று கடந்த வாரம் இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்துகொண்டு பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதுளை தமிழ் மகா வித்தியாலய கலைச்செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

**லுணுகல நிருபர்**

பதுளை தமிழ் மகா வித்தியாலயத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கலைச்செல்வ விநாயகர் ஆலய புனராவர்த்தன ஏக குண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி கடந்த 27 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.35 மணி முதல் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகின.

28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.15 மணிமுதல் எண்ணெய் காப்பு சாத்துதல் நடைபெற்றது. 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சதுர்த்தி திதியும் விசாகநட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.13 மணி முதல் 10.40 மணி வரையிலுள்ள சுப முகூர்த்தத்தில் அருள்மிகு கலைச்செல்வ விநாயகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நடைபெற்றது.

பிரதிஸ்டா பிரதம குரு ஹாலிஎல ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலய குரு கிரியாரத்தினம் சிவஸ்ரீ பொன் ஆறுமுக ரமேஸ் குருக்கள் தலைமையில், தேவகாரிய சம்பன்னராக பதுளை, ரிதிபான பேச்சியம்மன் ஆலய பிரதம குரு. ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ. ஆர்.பி.சாமி குருக்கள், சர்வ ஸாதகம் கிரியாபூசனம் சிவஸ்ரீ வெங்கட சுந்தரராம குருக்கள், உதவி குரு மோகன கீர்த்தன் சர்மா ஆகியோர் கும்பாபிஷேக கிரியைகளை மேற்கொண்டார்கள்.

எல்லாம் வல்ல அருள்மிகு கலைச்செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு தெய்வீக அருளைப் பெற்றுய்யுமாறு பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், இந்து மாமன்றத்தினர், வர்த்தக பிரமுகர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள் அனைவரும் அழைப்பு விடுத்திருந்தனர்.



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் கல்வி பயின்று சித்தியடைந்த பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டு பயிலுனர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்த போது.

## பறகஹதெனியாவில் 1000 பேருக்கு நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வு



ஜம்மிய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா மற்றும் பறகஹதெனிய ஜாமிஉத் தவ்ஹீத் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியன இணைந்து நடத்திய நோன்பு திறக்கும் விசேட இப்தார் நிகழ்வு பறகஹதெனிய தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட மைதானத்தில் தலைவர் என். பீ. எம். அபூபக்கர் சித்தீக் மதனி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜம்மிய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளர் ஏ. எல். கலிலுர்ரஹ்மான் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**இக்பால் அலி**

# கிழக்கின் குரல்



## மாணவர்களுக்கான ஜனாதிபதியின் சத்துணவுத் திட்டம்

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிகரமாக முன்னெடுப்பு





**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சின் வழிகாட்டுதலில் வலயக் கல்வி அலுவலகங்களின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் திட்டம் தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் மிகவும் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலைய அலுவலக பிரிவுகளில் செயல்படும் 326 பாடசாலைகளில் 52,473 மாணவர்களுக்கு இந்த போசாக்கு உணவு வழங்கும் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த விசேட திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் இந்த போசாக்குணவு வழங்கும் திட்டம் (28) வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் கே. பாஸ்கர் தலைமையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கான உணவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாநகர சபை வலய அமைப்பாளர் பீ.ரீ.அப்துல் லத்தீப் கருத்து தெரிவிக்கையில்; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய வழங்கப்படும் இந்த போசாக்கு உணவு விநியோகிக்கும் திட்டம் மாணவர்களுக்கு மிகுந்த பிரயோசனம் அளிப்பதுடன் குறிப்பாக வறிய மாணவர்களுக்கு இது மிகவும் வரப்பிரசாதம் என தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்திய கல்வி வலய பிரிவிலுள்ள 66 பாடசாலைகளிலுள்ள 13 ஆயிரத்து 858 மாணவர்களுக்கும் மட்டக்களப்பு மேற்குபிரிவில் 68 பாடசாலைகளிலுள்ள 13 ஆயிரத்து 954 மாணவர்களுக்கும் இந்தபோசாக்கு உணவு வழங்கப்படுகிறது.

## மட்டு. மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

சிலுவையில் அறையப்பட்ட ஜேசு பிரான் உயிர்த்தெழுந்த அற்புதத்தினை கொண்டாடும் உயிர்த்த ஞாயிறு தினம் நேற்றைய தினம் கிறிஸ்தவ மக்களினால் கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேவாலயங்களில் நேற்றைய தினம் உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு வழிபாட்டின்போது குண்டுத்தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இம்முறை உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் ரொஷான் மகேசனின் தலைமையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களுக்காக விசேட பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டதுடன் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவும் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

## புதிய பிரதேச செயலாளருடன் சமூக சேவை அமைப்பினர் சந்திப்பு

**கல்குடா தினகரன் நிருபர்**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக கடமையேற்றுள்ள ஏ.தாஹிரை காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் வெள்ளிக்கிழமை (29) பிரதேச செயலகத்தில் சந்தித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

இதன் போது அமைப்பின் வேலைத் திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட பிரதேச செயலாளர், அமைப்பினருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டதுடன் தன்னால் முடியுமான உதவிகளையும் வழங்குவதாக தெரிவித்தார்.

நிகழ்வில் காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினரால் புதிய பிரதேச செயலாளரை வரவேற்று நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## றமழான் விடுமுறைக்கால கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள்



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

றமழான் விடுமுறைக் கால ஆர்.வீ.சீ கற்கை நெறியை பூர்த்தி செய்த ஒலுவில் பிரதேச மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு (29) ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஹிக்மா சிறுவர் கழகத்தின் தலைவரும், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட மாணவருமான ஏ.ஜே. இன்சாமுல் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம், பாராளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் பிரதேச இணைப்பாளர் எம்.ஜே.எம். அஸ்ஹர், பாராளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை பிரதேச இணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ், அதிபர் ஏ.எல். அப்துல் ஜப்பார், பிரதி அதிபர் ஐ. ஜுமான் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் றாசி பரீட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனன தினம்



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

"ஈழத்துக் காந்தி" என அழைக்கப்படும் தந்தை செல்வா அவர்களின் 126ஆவது பிறந்த நாளை ஒட்டி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்து நேற்று (31) மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி திருக்கோணமலை மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கந்தசாமி செல்வராசா, மாவட்டக் கிளை உறுப்பினர் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலக இப்தார் நிகழ்வு





**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புனித றமழான் மாதம் முழுவதும் முஸ்லிம்கள் நோன்பிருந்து அதனை முடிவுறுத்தும் 16வது நாள் இப்தார் நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம்.எச். எம். பசீல், தொழில் நியாயாதிக்க சபை தலைவர் வீ.எம். சியான், ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம்.எஸ்.பஷீரின் ஒருங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சகல திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு நகர் வர்த்தகர்கள், மட்டக்களப்பு சலாமா பள்ளிவாசலின் நிருவாகிகள், சலாமா பௌண்டேசன் அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு சலாமா பௌண்டேசன் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். ரிஸ்வி மஜீதியினால் இப்தார் விசேட உரை நிகழ்த்தப்பட்டது.

மேலும் காத்தான்குடியில் அமைந்துள்ள அல்அக்ஷா வடிவிலான பெரிய ஜும்ஆ பள்ளிவாசலின் முஅத்தின் ஏ.எல். அப்துல் அஸீஸின் அதானுடன் இப்தார் நிகழ்வு நிறைவு பெற்றது.

## மட்டக்களப்பு மாவட்டம்;

# வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 100 குடும்பங்களுக்கு காணி உறுதிகள்





**வவுணதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதிகளைப் பெறாத 100 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சனிக்கிழமை (30) வழங்கி வைத்தார். பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரெத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காணி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்த மக்களில், இலுப்படிச்சேனை, வவுணதீவு, மகிழவட்டவான் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 100 பேருக்கு இன்றைய தினம் காணி அனுமதிப்பத்திரம் மற்றும் காணி உறுதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது உணவகங்களில் திடீர் சோதனை; உணவுகள் அழிப்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்களில் சனிக்கிழமை (30) திடீர் பரிசோதனையும் சுற்றிவளைப்பும் இடம்பெற்றது.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளினால் இந்த கள பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கடை உரிமையாளர்களை கொண்டே அழிக்கப்பட்டன.

## கல்முனை கடற்கரைப் பகுதிகளில் சுத்திகரிப்பு வேலைத்திட்டம்



**சாய்ந்தமருது விசேட நிருபர்**

சர்வதேச கழிவுகளற்ற தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக் குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் சனிக்கிழமை (30) விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில் திண்மக்கழிவகற்றல் பிரிவினரால் இச்சுத்திகரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கழிவுகள் யாவும் அகற்றப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டன.

றமழான் நோன்பு காலத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸ்மி நன்றி தெரிவித்துள்ளார்.

## பொத்துவில் இப்தார் நிகழ்வில் ரவூப் ஹக்கீம் எம்.பி பங்கேற்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி பைசல் முகைதீனின் தலைமையில், மாபெரும் இப்தார் நிகழ்வு பொத்துவில் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (29) நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் பெரும்பாலான பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உலமாக்களினால் பயான் நிகழ்வும் இடம்பெற்றதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தற்கால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மர்ஹூம் மையோன் முஸ்தபா ஞாபகார்த்த இப்தார் நிகழ்வு ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பங்கேற்பு






நூருல் ஹுதா உமர்

முன்னாள் பிரதி அமைச்சரும் பிரபல சமூக சிந்தனையாளருமான மர்ஹூம் மையோன் முஸ்தபாவின் ஞாபகார்த்தமாக அவர்களது புதல்வர்களான மயோன் குரூப் ஒப் கம்பெனியின் தவிசாளரும் சமூக சேவையாளரும் எடிகேசன் அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா மற்றும் மையோன் நிறுவனத்தின் பணிப்பாளர் றம்லி முஸ்தபா ஆகியோரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் 2024.03.30 ஆம் திகதி இடம்பெற்றது.

பெருமளவான மக்களும் அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்குகொண்டிருந்த இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் அஷ் செய்க். எம்.ஐ. எம். ஆதம்பாவா (றஷாதி) அவர்கள் மார்க்க சொற்பொழிவாற்றினார். அத்துடன் துஆ பிராத்தனையும் இடம்பெற்றது.

நிகழ்வின்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான ஏ.எம். ஜெமில், கே.எம். அப்துல் றஸ்ஸாக், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் றஹ்மத் மன்சூர், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. தாஹிர், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில் உள்ளிட்ட பிரமுகர்களுடன் உலமாக்கள் கல்விமான்கள் அதிபர்கள் என பலரும் பங்குகொண்டிருந்தனர்.

நிகழ்வில் முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் மையோன் முஸ்தபா தொடர்பான நினைவலைகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் எடுத்துக் கூறினார். அவரது உரையில் மர்ஹூம் மையோன் முஸ்தபா அவர்கள் கல்முனையை வடிவமைப்பதில் கொண்டிருந்த கரிசனையை எடுத்துக் கூறினார். இறுதியாக பாடசாலை அதிபர்களால் றிஸ்லி முஸ்தபா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது. அத்துடன் றிஸ்லி முஸ்தபா அனைவருக்கும் நன்றிகூறி உரையாற்றினார்.

# பேரீச்சம்பழம் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் சவூதி அரேபியா முதலிடம்





சவூதி அரேபியா பேரீச்சம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் உலகில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பதாக உலக வர்த்தக நிலைய இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், 111 நாடுகளுக்கு, 300 க்கும் மேற்பட்ட பேரீச்சம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதால், 579 மில்லியன் ரியால்களுக்கு அதிகமான மதிப்புள்ள, 1.6 மில்லியன் டொன்களை உற்பத்தி ஏற்றுமதி செய்து சவூதி அரேபியா உலகளாவிய ரீதியில் முதலிடம் பிடித்துள்ளது.

பொது முதலீட்டு நிதியத்தின் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவின் நிர்வாக நுகர்வோர் மற்றும் சில்லறை விற்பனைத் துறையின் தலைவர் மாஜித் அல் அசாஃப் கூறுகையில்: "பேரீச்சம்பழங்களை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் மிக முக்கியமான நாடுகளில் சவூதி அரேபியா உலகில் முதலிடத்தில் உள்ளது. அதன் உற்பத்திகள் உயர் தரமானவையாகும். அவற்றை நுகர்வோரின் எண்ணிக்கையும் அதிகமானதாகும். சவூதி அரேபியா தனது 2030 எனும் இலக்கை அடைய இத்துறை மிகப் பிரதானமான துறைகளில் ஒன்றாக நோக்கப்படுகிறது.

சவூதி 34 மில்லியன் பேரீத்தம் மரங்களை பராமரித்து வருகிறது, அல்கஸீம் பிரதேசத்தில் மாத்திரம் 11 மில்லியனுக்கும் அதிகமான பேரீத்தம் மரங்கள் உள்ளன.

பாரம்பரிய பயிர்கள் மீது அதிக கவனம் செலுத்தும் வகையில் மதீனா முனவ்வராவில் "அஜ்வா" வகை பேரீச்சம் பழங்களின் தரம் மற்றும் உற்பத்தி பொது முதலீட்டு நிதி நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் கணிசமாக மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"மதீனா பாரம்பரிய நிறுவனத்தை" நிறுவுவதன் மூலம், மதீனா பிராந்தியத்தில் பேரீச்சம்பழ உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதிலும், அஜ்வா பேரீச்சம்பழங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் அதிக கவனம் செலுத்தும். இது உணவு மற்றும் விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்வதுடன் உள்ளூர் உற்பத்தியின் அளவை அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மதீனா பாரம்பரிய நிறுவனம், அஜ்வா பேரீச்சம்பழ உற்பத்திகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சந்தைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டாலும், பிற பேரீச்சம்பழ வகைகளிலும் கவனம் செலுத்தும்.

அத்துடன் பேரீச்சம்பழ உற்பத்திகளுக்கான உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக. இந்நிறுவனம் அறிவியல் நிபுணத்துவம் மற்றும் சிறந்த நவீன விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலையான விவசாயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பை வழங்கும்.

"மதீனா பாரம்பரிய நிறுவனத்தை" நிறுவுதல் என்பது சவூதி அரேபியாவின் பொருளாதாரத்தின் மிகவும் முக்கியமான துறைகளில் ஒன்றான விவசாயம் மற்றும் உணவுத் துறையை பலப்படுத்தும்.

இது தேசிய முதலீடுகள் மற்றும் உலக நாடுகளுக்கு ஏற்றுமதியை அதிகரித்தல் எனும் சவூதியின் 2030 இலக்குகளை அடைவதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்குமான மிக முக்கியமான துறைகளில் ஒன்றாக இருக்குமென சுற்றுச்சூழல், நீர் மற்றும் விவசாய அமைச்சகம் தெரிவிக்கின்றது.

2022 ஆம் ஆண்டில் சவூதி அரேபியாவின் பேரீத்தம்பழ ஏற்றுமதியின் மதிப்பு 14% விகிதத்தால் அதிகரித்து, 1.462 பில்லியன் ரியால்கள் இலாபத்தை ஈட்டியுள்ளது என பேரீத்தம் மரம் மற்றும் பேரிச்சம்பழங்களுக்கான தேசிய மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சவூதி பேரீத்தம்பழங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் எண்ணிக்கை சுமார் 119 நாடுகளாக அதிகரித்துள்ளது.

சவூதி அரேபியா பேரீத்தம் பழம் தொடர்பான புள்ளிவிபரங்கள்:

**# 31,234,153 பேரீத்தம் மரங்கள்.**

**# 300 க்கும் மேற்பட்ட வகைகள்.**

**# ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளின் எண்ணிக்கை 111 ஆகும்.**

**# மொத்த உள்நாட்டு உற்பத்தி 1,539,755 டொன்கள்.**

**# ஏற்றுமதி 215,343,005 கிலோ பேரீத்தம் பழங்கள்.**

**# உருமாற்றம் செய்யப்பட்ட பேரீத்தம் பழ தயாரிப்பு ஏற்றுமதி 46,970,933 கிலோ.**

**# பேரீத்தம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் அரச அங்கீகாரம் பெற்ற நிருவாகிகள் 11 ஆகும்.**

**# பேரீத்தம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சேவை மையங்கள் 6.**

இங்கு குறிப்பிட்டு கூற வேண்டிய விடயம் யாதெனில் ஒவ்வொரு வருட ரமழானிலும் பல்வேறுபட்ட நாடுகளுக்கு சவூதி அரேபியா நூற்றுக்கணக்கான டொன் பேரீத்தம்பழங்களை நன்கொடையாக வழங்கி வருகின்றது. அந்த வகையில் எமது நாட்டு முஸ்லிம் மக்களின் ரமழான் மாத பேரீத்தம் பழ தேவையினை நிறைவேற்றும் வகையில் சுமார் 50 டொன் பழங்களை நன்கொடையாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்ககாகும்.



**முஜாஹித் சுபைர்**
**விரிவுரையாளர்,**
**நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்**

# வடமராட்சி ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடக தூதுவிருது....!



யாழ்ப்பாணம் வடமராட்சியிலிருந்து 50 ஆண்டுகளுக்கு மேல் ஊடகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் சின்னத்திரை தில்லைநாதன் அவர்களுக்கு. ஊடக தூது எனும் கௌரவ விருது வழங்கப்படவுள்ளது.

பிஷப் சௌந்தரராஜன் மீடியா சென்டர், பிஷப் ஜஸ்டின் media library and media research centre குறித்த ஊடக தூது எனும் கௌரவ விருதை வழங்கவுள்ளது.

பிஷப் சவுந்தர்ராஜன் மீடியா சென்டர் அண்ட் பிஷப் ஜஸ்டின் media research ஆகியவற்றின் விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விலேயே வடமராட்சி ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் அவர்களுக்கு. 50 ஆண்டுகளுக்கு மேல் ஊடகத்துறையில் பணியாற்றியமைக்காக. ஊடக தூது எனும் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

சின்னத்துரை தில்லைநாதன் யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடாக இல்லத்தின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுர மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடையை அடுத்து சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செய்கைக்கு தேவையான நீர் மகாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து சிறுபோக நெற்செய்கை தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மாவட்ட விவசாய திணைக்கள அலுவலகம் தெரிவிக்கின்றது.

அதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தர குளங்களின் கீழ் உள்ள வயற் காணிகளிலும் குளங்களில் காணப்படும் நீர்மட்டத்திற்கு அமைவாக நெற்செய்கையினை மேற்கொள்ளும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தின் மகாவலி எச் வலயத்தில் நெற்செய்கை மற்றும் சிறு தானிய பயிர்செய்கையும் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிட்டுள்ளதாக விவசாய திணைக்களத்தின் அநுராதபுரம் மாவட்ட பணிப்பாளர் தேனுவர மேலும் தெரிவித்தார்.

# 25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திறந்து வைப்பு!




மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் நூற்றாண்டின் தொடக்க விழாவினை சிறப்பிக்கும் முகமாக குறித்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலையை இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, சுவாமி விபுலாநந்தர் மணிமண்டலத்தின் பொது விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ், அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான கே. கருணாகரம், இரா.சாணக்கியன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்களான கே.கருணாகரன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தினகரன் — கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு – (NCB) இறக்குமதிகள்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| கோவைக் குறியீடு | உருப்படி | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|
| SPC/SUP/FI/001/2024/14 | Spare parts for Orient X CELL 36000 Cut Off size Web offset printing machine (LOT-1) | 300,000.00 |
| SPC/SUP/FI/004/2023/35 | Spare parts for Orient X CELL 36000 Cut Off size Web offset printing machine (LOT-2) | 300,000.00 |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக பின்வரும் தகுதி மூலப்பிரமாணங்களை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. முகவரின் நிலைமை உற்பத்தியாளரின் அங்கீகாரம்/ அட்டோர்ணி தத்துவம் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-01ஆம் திகதி முதல் 2024-04-17ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் செலுத்தி, பாதுக்க, பணாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வி குறியீட்டிலக்கத்தைக் குறிப்பிட்டு பாதுக்க, பணாலுவ, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பணாலுவ, பாதுக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2024-04-18ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
5. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட நாள் முதல் 30 நாட்காட்டி நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
6. கோரிக்கை பிணை முறியாக பண வைப்பு அல்லது அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குச் செலுத்தக்கூடியதாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் கீர்த்திவாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 2757500 எனும் தொலைபேசி / தொலைநகல் இலக்கத்தினூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ, பாதுக்க.**

2024-04-01

SPC

## காணி கையகப்படுத்தும் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம்) 39(அ) 1ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இங்கு கீழ் குறிப்பிடும் அட்டவணையில் விபரிக்கின்ற காணித்துண்டு உள்ளடங்கிய காணியின் உடைமைத்துவத்தை 1971 இலக்கம் 270 கொண்ட 38(அ) காப்பு வாசகக் கட்டளைபடி அரசாங்கத்திடம் பொறுப்பேறகப்பட்டுள்ளதோடு அக்காணியின் ஒரு பகுதியை கையகப்படுத்தும் சட்டத்தின் 39(அ) 1ஆம் பிரிவின் கீழ் கௌரவ காணி அமைச்சரால் உரித்து நீக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2362/79 இலக்க மற்றும் 2023.12.15 திகதியிட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தெற்கு |
| மாவட்டம் | : காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : இமதுவ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 172 இமதுவ |
| ஊரின் பெயர் | : இமதுவ |
| காணியின் பெயர் | : கொடகும்புர, கபலவில மற்றும் கபலவில கும்புர |
| திட்டத்தின் பெயர் | : GA/IMD/ 2023/235 |
| துண்டு இலக்கம் | : D |
| அளவு | : 0.0144 ஹெக்டயார் |

**எஸ்.ஏ.எம். நஸ்லி,**
**பிரதேச செயலாளர்,**
**இமதுவ.**

**முகவரி - பிரதேச செயலகம் இமதுவ, காலி**

திகதி 2024.03.22

**எனது இல:** RBK/LAN/AQURE/A3/121
**காணி அமைச்சின் குறிப்பு இல.:** 4-3/7/2019/HW/79

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.11.22ஆம் திகதிய 2359/19 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ரம்புக்கனை |
| அமைவிடம் | : இல. 6பீ, இஹல வல்பொல கிராம நிலதாரி பிரிவில் |
| கிராமத்தின் பெயர் | : இஹல வல்பொல |
| வரைபட இலக்கம் | : இ.கி.வ. 97 பிற் சேர்க்கை இல. 3, தாள் இல. 3 |
| காணியின் பெயர் | : கோன் கஹமுலஹேன உட்பட்ட காணி துண்டு 14 |
| துண்டு இல. | : 49,50,51,52,53, 54,55,56,57,58, 59,60,61,62 |
| விஸ்தீரணம் | : 0.2198 ஹெக்டயார் |

**கே.ஜீ.எஸ். நிஷாந்த**
**பிரதேச செயலாளர் (ப.அ.),**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**ரம்புக்கனை.**
2024.04.01

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### 1500 கி.மீ வீதித் திட்டத்தின் புனரமைப்பதற்கான விலைமனுக்கள் அழைத்தல் (IFB)

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த்தின் பெயர் |
|---|---|---|
| 01 | RDA/SP/1500KM/WP/29 | துங்கொதஹேன பதுவத்த வீதியின் புனரமைப்பு |
| 02 | RDA/SP/1500KM/WP/47 | கொஸ்கம பரணகம வீதியின் புனரமைப்பு |
| 03 | RDA/SP/1500KM/WP/48 | தலாஹேன பதலவத்த பிரதான வீதியின் புனரமைப்பு |

தேசியப்போட்டி கேள்விகோரலின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஏப்ரல் 01 முதல் 2024 ஏப்ரல் 22 வரை RDA இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,**
**மாகாண பணிப்பாளர் பணிமனை (மேல்மாகாணம்)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## போதனா வைத்தியசாலை – பதுளை

### உள்ளக உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல் - 2024/2025

**பதுளை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் 2024 மே 01 முதல் 2025 ஏப்ரல் 30 வரை ஒரு வருட காலத்திற்கு வைத்தியசாலையின் உள்ளக உணவகத்தின் சேவையை வழங்குவதற்காக தகைமையுடனான கேள்விதாரர்களிடமிருந்து கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் பிரகாரம் கேள்விகள் கோரப்படும்.

03. இதுபற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு 103) அல்லது கீழ்க்காணும் வைத்தியசாலை இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு ஒரு கேள்விக்காக மீளளிக்கபடாத ரூ. 3000.00 தொகையை வாரத்தின் வேலை நாட்களில் (அலுவலக நாட்கள்) முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்த பின்னர் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு மேற்படி தொகையை செலுத்திய பின்பு 2024.04.01 முதல் 2024.04.24 வரையும் 2024.04.25 பி.ப. 1.00 வரையும், தேவையான கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொள்ளலாம்.

05. பூர்த்திசெய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.04.25 பி.ப. 2.30 இற்கு முன்பு பதுளை, போதனா வைத்தியசாலைக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அன்றே பி.ப. 2.30 இற்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. சகல கேள்விதாரரும் ரூபா 50,000.00 பெறுமதியான மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது இவ்வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு காசாக செலுத்தி (மீளளிக்கப்படும்) பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இக் கேள்வி சமர்ப்பிக்கப்படும் போது உணவகம் பற்றிய தளபரிசீலனையின் பின்பு கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.

08. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை, பதுளை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை, பதுளை,**
**தொ.பே. இல. :- 055-2222261, பெக்ஸ் :- 055-2231205**
**ஈமெயில் :- info@thbadulla.health.gov.lk**
**இணையதளம் :- www.thbadulla.health.gov.lk**
**2024.03.30**

## சியபத்த பினான்ஸ்

# பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 91 வாகனங்கள்

2024 மார்ச் 16 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

தம்புள்ளை, எதபன்திவெவ, பொரலுகந்த, வென்தேசிவத்த, இல. 427, சியபத்த பினான்ஸ் வாகனக் கூடத்தில் இடம்பெறும்.

பரீட்சிப்பது ஏப்ரல் 03, 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் சியபத்த பினான்ஸ் தம்புள்ளை மற்றும் அம்பாறை வாகனக் கூடங்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

### DAMBULA VEHICLE YARD - 0740054361

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **THREE WHEELER** | | |
| CP-ABR-3XXX | BAJAJ,RE | 2018 |
| CP-ABQ-0XXX | BAJAJ,RE | 2017 |
| NP-ABQ-8XXX | BAJAJ,RE | 2017 |
| CP-ABM-3XXX | TVS,KING | 2016 |
| CP-ABG-9XXX | BAJAJ,RE | 2015 |
| NW-AAW-9XXX | BAJAJ,RE | 2015 |
| NW-ABG-3XXX | BAJAJ,RE | 2015 |
| EP-AAU-6XXX | BAJAJ,RE | 2014 |
| CP-AAW-7XXX | BAJAJ,RE | 2014 |
| WP-AAU-1XXX | BAJAJ,RE | 2014 |
| EP-AAI-1XXX | BAJAJ,RE 205 | 2013 |
| CP-AAM-6XXX | BAJAJ,RE 205 | 2013 |
| EP-AAD-0XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP-YY-9XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP-AAB-9XXX | BAJAJ,RE 205 | 2012 |
| CP-YU-2XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YK-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SP-YO-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP-YN-1XXX | BAJAJ,RE 205 | 2011 |
| EP-YB-8XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| SP-YA-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| SG-QW-6XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-YA-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-YD-4XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-QU-9XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| WP-QV-9XXX | BAJAJ,AR4S UG | 2009 |
| NC-QU-0XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QT-4XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QV-7XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| WP-QV-3XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QU-0XXX | BAJAJ,4S | 2009 |
| EP-QS-3XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| SG-QU-8XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| CP-QO-3XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QR-7XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QO-0XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QR-3XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QP-0XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| SP-QO-8XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| NP-QQ-6XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QM-5XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| NP-QL-4XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| CP-QE-7XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| NW-QG-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| NP-QE-2XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| NW-QB-3XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| CP-GO-6XXX | BAJAJ,BAJAJ AUTO | 2001 |
| **MOTOR CAR** | | |
| NC-CAN-4XXX | MICRO,PANDA LC 1.0 | 2015 |
| WP-KB-4XXX | NISSAN,SUNNY | 2001 |
| 16-6XXX | NISSAN,SUNNY HB12 | 1986 |
| 14-4XXX | MITSUBISHI,LANCER | 1986 |
| 14-6XXX | TOYOTA,CORONA | 1983 |
| **MOTOR MINI TRUCK** | | |
| WP DAH-5XXX | TATA,SUPER ACE TRUCK | 2019 |
| WP-DAF-5XXX | TATA,SUPER ACE | 2017 |
| WP-DAB-0XXX | TATA,XENON LIGHT TRUCK | 2015 |
| NW-DAC-9XXX | TATA,ACE XPRESS | 2015 |
| WP-DAB-2XXX | TATA,SUPER ACE | 2015 |
| NW-PX-6XXX | MAHINDRA,MAXXIMO PLUS | 2014 |
| WP-PV-6XXX | MAHINDRA,MAXXIMO PLUS | 2013 |
| NW-PT-1XXX | TATA,SUPER ACE | 2012 |
| **MOTOR LORRY** | | |
| WP-LB-5XXX | TATA,LPT1615 | 2006 |
| NW-LA-6XXX | DAIHATSU,HIJET GD-S200P | 2001 |
| SG-LL-9XXX | MITSUBISHI,KC-FE538B CANTER | 1996 |
| 42-8XXX | ISUZU,NPR59L-OPEN | 1987 |
| **LAND VEHICLES / TRACTOR** | | |
| EP-RF-5XXX | MAHINDRA,YUVO 575 DISPS | 2017 |
| NP-RF-0XXX | MAHINDRA,575DINSTMKM | 2017 |
| 36-0XXX | MASSEY FERGUSON,MF 135D | 1971 |
| **SPECIAL PURPOSE VEHICLES** | | |
| WP-ZA-3XXX | JCB,3CX BACKHOE LOADER | 2006 |
| **COMBINE HARVESTER** | | |
| ZLPZ-B03256HW | AGROTECH ECO COMBINE HARVESTER | 2020 |
| **MOTOR BIKE** | | |
| NE BGL-8XXX | TVS,METRO | 2017 |
| NP-BDC-6XXX | BAJAJ,PULSAR 150 AS | 2015 |
| **MOTOR VAN** | | |
| CP-PD-8XXX | SUZUKI,EBD DA64V | 2006 |

### AMPARA VEHICLE YARD - 0637200880 / 0762775942

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **THREE WHEELER** | | |
| EP-AAK-0XXX | BAJAJ,RE 205 | 2013 |
| SG-QG-2XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| **MOTOR CAR / LORRY** | | |
| EP-HP-8XXX | MITSUBISHI,LANCER | 2003 |
| EP-GB-7XXX | TOYOTA,COROLLA | 1997 |
| 17-5XXX | NISSAN,YU12 BLUEBIRD | 1990 |
| EP-LI-4XXX | TATA,LPK1615 | 2011 |
| EP-LN-4XXX | MAHINDRA,BIG BOLERO MDI | 2017 |
| EP-LC-4XXX | LANKA ASHOK LEYLAND,COMETIPPER | 2006 |
| NW-JK-3XXX | KIA,CERES 2400 | 1999 |
| **LAND VEHICLES / TRACTOR** | | |
| EP-RG-2XXX | TAFE,45 DI | 2019 |
| EP-RF-5XXX | TAFE,45DI | 2017 |
| SG-RF-2XXX | KUBOTA,L4508SR | 2017 |
| EP-RF-4XXX | MAHINDRA,575DINBPMKM | 2017 |
| EP-RF-0XXX | TAFE,45 DI | 2016 |
| EP-RE-1XXX | MAHINDRA,575DI | 2015 |
| **COMBINE HARVESTER** | | |
| ZH20161114775 | DN-XIA,GRAND V | 2016 |
| 7067499 | CLAAS,CROP TIGER COMBINE HARVESTER | 2015 |
| **SPECIAL PURPOSE VEHICLES** | | |
| NW-ZA-8XXX | FURUKAWA,FL60A WHEEL LOADER | 2008 |
| EP-ZA-6XXX | TOYOTA,SDT30 WHEEL LOADER | 2002 |
| **MOTOR VAN** | | |
| NW-GS-2XXX | ISUZU,FARGO | 1997 |

இந்த ஏல விற்பனைக்கு **ZOOM** தொழில்நுட்பத்தின் ஊடாக நேரடியாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு சியபத்த பினான்ஸ் அம்பாறை கிளையில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறை கிளை - இல. 32, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அம்பாறை. தொ.பே. 076 966 5224 (தமித்)

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 2,000 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 0இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
**A N ALGEWATHTHA AUCTIONEER**
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com

www.lankaauction.lk




## ஊவா மாகாண சபை

### பிரதிப் பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகம்

### ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரல் 2024/2025

01. ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உணவு பானங்களை வழங்குவதற்கு 2024.05.05 முதல் 2025.05.04 வரை ஒரு வருட கால எல்லைக்கு உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்காக குறித்த துறையில் அனுபவம் மற்றும் அதுபற்றிய வியாபார பெயர் பதிவின் கீழ் பதிவு செய்துள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் ரூ. 1500.00 ஆவதுடன் அத்தொகை பிரதி பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் செலுத்தி கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய தகவல்களை 2024.04.01 முதல் 2024.04.21 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் ஊவா மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். (தொடர்பு 055-2228627)

03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் பெறுகைக் குழுவிற்கு 2024.04.22 பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்பு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப் பத்திரங்கள் 2024.04.22 பி.ப. 2.30 இற்கு பிரதிப் பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகத்தில் திறக்கப்படும்.

04. பெறுகை பற்றிய இறுதி தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதிப் பிரதம செயலாளர் (மனிதவள மற்றும் பயிற்சி) அலுவலகம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118**

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

LJ-8448 Toyata Hilux Vigo, 2009, cab கூடிய விலைக்கோரி க்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே இல. 071454 2958
022168

**119**

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

UP -ND - 1008 - TATA - LPO 1515TC - Motor Coach 2017 - WHITE BLUE கூடிய விலைக் கோரிக்கைக்கு, CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033
022212

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைச்சு

அம்பாறை மாவட்ட செயலகத்தில் உத்தேச மூன்றுமாடி கட்டிடத்தின் மிகுதி வேலைகள் நிர்மாணம் - கட்டம் 04 2024.03.18ம் திகதி பிரசுரிக்கப்பட்ட எமது பத்திரிகை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உருப்படி இல மற்றும் விபரம் | பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது | திருத்தம் (புதிய) |
|---|---|---|
| 4.C (Eligibillty) | One project Value 70 Million within last three years | Cumulative project value 70 Million within last three years |
| 6 and 7 (Bid issuing & closing) | 18.03.2024 - 09.04.2024 | 18.03.2024 - 18.04.2024 |
| 8 (Bid Opening) | 10.04.2024 | 19.04.2024 |
| 11 (Pre bid meeting) | 02.04.2024 | 09.04.2024 |

விளம்பரத்தில் ஏனைய சகல விதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி இருக்கும்

**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலகம், அம்பாறை.**




## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கைத்தொழில் அமைச்சு
### (சிறிய மற்றும் நடுத்தர அளவான அபிவிருத்திப் பிரிவு)
### இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை
### "லக்சல"

### "தொழில்முயற்சி வள திட்டமிடல் (Enterprises Resource Planning) கணனி முறைமையொன்றுக்கான கட்டமைப்பு ஒன்றுக்கான விலைமனுக் கோரல்"

இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை - லக்சல உள்நாட்டு கைப்பணி தொழில்துறையாளர்களுக்கு தமது தயாரிப்புகளின் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் சுய நிதி அரச வர்த்தக நிறுவனம் ஒன்றாகும்.

இந்த சபையின் ஒட்டுமொத்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பொருந்தும் கணனி முறைமை ஒன்றை நிறுவுவதற்கு (ERP) அந்த சேவை வழங்கும் நிறுவனத்தினால் கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேவையான அலகுகள்
- விற்பனை செயற்பாடுகள் மற்றும் விநியோகம்.
- நிதி தரவு முகாமைத்துவம்.
- கொள்வனவு மற்றும் வழங்குநர் முகாமைத்துவம்.
- மனித வளம் மற்றும் நிர்வாக தரவு முகாமைத்துவம், சம்பளம் மற்றும் வருகை, வெளிச்செல்லல் தரவு முகாமைத்துவம்.
- நிலையான சொத்துகள் முகாமைத்துவம்.
- பொருட்கள் மற்றும் கையிருப்பு கட்டுப்பாடு.
- கட்டமைப்பு முகாமைத்துவம்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற தரப்புகளை அறிவூட்டுவதற்கு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு (Pre-bid Meeting) 2024 ஏப்ரல் 04 (வியாழக்கிழமை) ஆகிய திகதி மு.ப. 10.30 க்கு லக்சல தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

மேலுள்ள தேவைகளுக்கு அமைவான வகையில் தயாரிக்கப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கீழுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப முடியும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ERP கட்டமைப்பு 2024" என்று குறிப்பிட வேண்டும்.

விலைமனுக்களை பெற்றுக்கொடுப்பது முடிவுற்ற உடன் கேள்விமனுக்கள் திறக்கப்படுவதோடு அதற்காக விலைமனுக்களை சமர்ப்பித்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் முழு உரிமை இலங்கை கைப்பணிப்பொருட்கள் கேள்விமனுக் குழு வசமானது என்பதோடு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் இது தொடர்பில் மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவினை வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

**தலைவர் (பெறுகை)**
**இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை**
**இலக்கம் 215, பௌத்தாலோக்க மாவத்தை,**
**தும்முல்ல,**
**கொழும்பு 07.**
**தொ.பே: 0112557132**




## பொது அறிவித்தல்

### 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 245 (2) பிரிவின் விதிகளில் உள்ளவாறு கூட்டிணைவு

எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி ஹோல்டிங்ஸ் எஸ்.எல். (பிறைவெட்) லிமிடெட் - PV 00297597 ("LPHSL"), ஐகோனிக் புரொப்பட்டி வன் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229818 ("IP1"), ஐகோனிக் புரொப்பட்டி டூ (பிறைவெட்) லிமிடெட் - PV 00229819 ("IP2"), ஐகோனிக் புரொப்பட்டி செவன் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229907 ("IP7"), ஐகோனிக் புரொப்பட்டி டுவெல்வ் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229912 ("IP12"), ஐகோனிக் புரொப்பட்டி போர்டீன் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229917 ("IP14"), ஐகோனிக் புரொப்பட்டி சிக்ஸ்டீன் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229919 ("IP16"), ஐகோனிக் புரொப்பட்டி நைன்டீன் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229920 ("IP19"), ஐகோனிக் புரொப்பட்டி டுவென்டி (பிறைவெட்) லிமிடெட் - PV 00229919 ("IP20"), ஐகோனிக் புரொபட்டி டுவன்டி டூ (பிறைவெட்) லிமெிடெட் - PV 00229929 ("IP22"), ஐகோனிக் புரொப்பட்டி டுவன்டி எயிட் (பிறைவெட்) லிமிடெட் - PV 00229969 ("IP28"), எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி வன் (பிறைவெட்) லிமிடெட் - PV 131201 ("LP1"), எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி டூ (பிறைவெட்) லிமிடெட் - PV 131202 ("LP2"), எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி த்ரீ (பிறைவெட்) லிமிடெட் - PV 131203 ("LP3"), எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி போர் (பிறைவெட்) லிமிடெட் - PV 131204 ("LP4") மற்றும் எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி பைவ் (பிறைவெட்) லிமிடெட் - PV 131205 ("LP5") இன் பணிப்பாளர்கள் சபைகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 242 (2) பிரிவின் விதிகளில் உள்ளவாறு "IP1, IP2, IP7, IP12, IP14, IP16, IP19, IP20, IP22, IP28, LP1, LP2, LP3, LP4 மற்றும் LP5" உடன் "LPHSL" தீர்க்கப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது. "IP1, IP2, IP7, IP12, IP14, IP16, IP19, IP20, IP22, IP28, LP1, LP2, LP3, LP4 மற்றும் LP5" ஆகியன 'LPHSL' இன் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களாகும். கூறப்பட்ட கூட்டிணைவின் விதிகளில் உள்ளவாறு, "IP1, IP2, IP7, IP12, IP14, IP16, IP19, IP20, IP22, IP28, LP1, LP2, LP3, LP4 மற்றும் LP5" இன் பங்குகள் எந்தக் கொடுப்பனவு அல்லது கரிசனையும் இன்றி இரத்துச் செய்யப்படும் என்பதோடு "IP1, IP2, IP7, IP12, IP14, IP16, IP19, IP20, IP22, IP28, LP1, LP2, LP3, LP4 மற்றும் LP5" இன் அனைத்து சொத்துகள் மற்றும் பொறுப்புகளையும் 'LPHSL' கையகப்படுத்தும். நிறுவனம் 'LPHSL' ஆக தொடரும். "LPHSL" இன் தற்போதைய பணிப்பாளர்கள் கூட்டிணைவுக்குப் பின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்களாக தொடர்வார்கள்.

முன்மொழியப்பட்ட கூட்டிணைவு மேற்கூறப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் சிறந்த நன்மையாகவும் அதேபோன்று கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு திருப்தியுடையதாக அமையும் என்றும் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபைகளின் நிலைப்பாடு என்பதோடு "LPHSL" உடனான கூட்டிணைவுக்குப் பின் பாதிப்பை ஏற்படுத்தும் கடன் தீர்வாற்றல் நிலை சோதனை திருப்திப்படுத்தப்படும்.

கூட்டிணைவு 2024 மே 03 ஆம் திகதி அல்லது கம்பனிப் பதிவாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய மற்றொரு திகதியில் அமுல்படுத்தப்படும்.

**சபை பணிப்பாளர்களின் உத்தரவுப்படி**
**எல்.ஓ.எல்.சி. கோர்பரேட் சேர்விசஸ் (பிறைவெட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**

எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி ஹோல்டிங்க எஸ்.எல். (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி வன் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி டூ (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி செவன் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி டுவெல்வ் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி போர்டீன் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி சிக்ஸ்டீன் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி நைன்டீன் (பிறைவெட்) லிமிடெட், ஐகோனிக் புரொப்பட்டி டுவென்டி (பிறைவெட் லிமிடெட், ஐகோனிக் புரொபட்டி டுவன்டி டூ (பிறைவெட்) லிமெிடெட், ஐகோனிக் புரொப்பட்டி டுவன்டி எயிட் (பிறைவெட்) லிமிடெட், எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி வன் (பிறைவெட்) லிமிடெட், எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி டூ (பிறைவெட்) லிமிடெட், எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி த்ரீ (பிறைவெட்) லிமிடெட், எல்.ஓ.எல். சி. புரொப்பட்டி போர் (பிறைவெட்) லிமிடெட், எல்.ஓ.எல்.சி. புரொப்பட்டி பைவ் (பிறைவெட்) லிமிடெட்

2024 மார்ச் 28

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

### மாகாண வீதி, போக்குவரத்துக் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்

### 01 தொன் வைப்ரேடிங் ரோல் 03ஐ கொள்வனவு செய்தல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகளில் பராமரிப்பு விடயங்களுக்காக 01 தொன் வைப்ரேடிங் ரோல் 03ஐ கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக்கட்டணம் (அதிகாரசபையின் பதிவு செய்த வழங்குநர்களை தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2024/18 | 01 தொன் வைப்ரேடிங் ரோல் 03ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 1000.00 + VAT+SSCL (ஒரு அலுவலகத்திற்கான) | ரூ. 40,000.00 | ரூ. 80,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.04.02 - 2024.04.19 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2024.04.22 பி.ப. 2.30 ஆவதுடன் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**

**தொ.பே. இல.: 011-4849825 / 4849845, 011-2321980**

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

### (மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### திவுலப்பிட்டிய முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளல்


**மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலப்பிட்டிய முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை (SLS Standard) | அளவு | தேவைப்படும் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2024/20 | திவுலப்பிட்டிய முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல் | சீமெந்து (50kg மூட்டை) | 1120 | ரூ. 2000.00 + vat + SSCL | ரூ. 10,000.00 | ரூ. 30,000.00 |
| | | 10 மி.மீ. உருக்கு கம்பி | 2000 | | ரூ.20,000.00 | ரூ. 60,000.00 |
| | | 12 மி.மீ. உருக்கு கம்பி | 2000 | | | |
| | | பைன்டிங் கம்பி (kg) | 200 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2024.04.01 முதல் 2024.04.18ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி காப்புறுதி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.04.19 மு.ப. 11.00 இற்கு இடம்பெறுவதுடன், இவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித. செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011 - 4849825/45, 011-2321981**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரல் இல. 048/T/2024**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொறியியல் சேவைகளுக்கான தற்போதுள்ள முனையக் கட்டிடத்தின் CAD மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக விலைமனுக் கோரல்**

(BID FOR DEVELOPING OF A CAD MODEL FOR THE EXISTING TERMINAL BUILDING FOR ENGINEERING SERVICES AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பொறியியல் சேவைகளுக்கான தற்போதுள்ள முனையக் கட்டிடத்திற்கு CAD மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக இருபத்தையாயிரம் ரூபா (25,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்கள் 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 24ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின் உடன் திறக்கப்படும்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் இருபத்தைந்து இலட்சம் ரூபாவுக்கான (2,500,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-04-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், இயந்திரவியல் பொறியியல் பராமரிப்புக் கட்டிடத்தின் கூட்ட அறையில் இடம்பெறும்.

ஏதேனும் மேலதிக விபரங்களை இயந்திரவியல் பொறியியல் பிரிவின் தலைவரிடமிருந்து 011-2264600 / 011-2264602 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10**

## பாதணிகளைக் கொள்வனவு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்பாட்டின் பிரகாரம் கீழ்க்காணும் பாதணி வகைகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | உருப்படி | தேவைப்படும் அளவு | இணைப்பு இலக்கம் | 1 - 2 உருப்படி வரை மீளளிக்கப்படாத கட்டணம் (ரு) |
|---|---|---|---|---|
| 01 | சத்திரசிகிச்சைக் கூட பாதணிகள் | 2175 | SF/06/Shoes/2024 | 3000.00 |
| 02 | மகளிர் பாதணிகள் | 1050 | | |

மேற்படி வழங்களுக்காக தகைமை கொண்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன் பாதணிகளுக்காக மேலேயுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு 2024.04.01 முதல் 2024.04.23 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2024.04.24 மு.ப.10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரின் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# தென் மாகாண சபை — முதலமைச்சு

## பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபையின் முதலமைச்சு பெறுகைக்குழுவின் தலைவரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலை விடயங்களுக்காக திறன் உடைய மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | வேலைகள் | தேவைப்படும் பதிவு தன்மை | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | உடுகம ஆதார வைத்தியசாலையின் கழிவுநீர் மற்றும் மலக்கழிவுகளை சுத்திகரிக்கும் அமைப்பை திட்டமிட்டு நிர்மாணித்தல் | CIDA C4 அல்லது அதற்கு மேல் | 700,000.00 | 12,500.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் ஊடாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்களை வழங்கும் போது, தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன் நிர்மாண, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்படி வகுதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA Grade) முன்னுரிமை, கேள்வி மதிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.04.01 முதல் 2024.04.29 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக கேள்விப் பத்திரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் இவ் இலக்கங்களுக்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். 091-4946620, 091-4946844

05. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.04.30 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண முதலமைச்சு, 5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.04.30 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண முதலமைச்சு பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் பிணையை இலங்கையின் வர்த்தக வங்கியிலிருந்து தென் மாகாண முதலமைச்சின் செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2024.04.30 முதல் 2024.08.27 வரை செல்லுபடியாகும். கேள்விப் பிணையொன்றை அல்லது முதலமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் நிதிப்பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைகள் நிராகரிக்கப்படும்.

08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 91 நாட்களாகும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள், இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பொதுவான தகவல்கள் (General Informations) ஆக்க ஆலோசனை (Design Prposal) மற்றும் விலைமனுக்களின் ஆலோசனை (Price Proposal) வேறுவேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் உள்ளடக்கப்படுமாறு செலோடேப் ஒட்டியிருத்தல் வேண்டும். மூலப் பிரதியில் “மூலப் பிரதி” என குறிப்பிட வேண்டியதுடன் நகல் பிரதியில் “நகல் பிரதி” என குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையையும் பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.04.10 மு.ப. 11.30 இற்கு முதலமைச்சில் நடைபெறும் ஆக்க ஆலோசனைகளை (Design Propsal) முதலில் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் அதன் மதிப்பீடு நடைபெற்ற பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களுக்கு மாத்திரம் விலைமனுக்கள் திறக்கப்படும்.

12. குறைபாடு உடைய கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு கேள்விகளை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் கேள்விப் பிணைத் தொகை அரசுடமையாக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண முதலமைச்சு,**
**5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**
**2024.04.01**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**

**வவுனியா — வடக்கு மாகாணம்**

## வேலைகளுக்கான பெறுகை

1.கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகள் வழங்கக்கூடிய பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2.தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் கேள்விகள் கோரப்படும்.

| | Category (Works) | Document Issuing/Purchasing period | | | | | From 01.04.2024 until 16.04.2024 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre bid Conference | | | | | 10.00 A.M on 09.04.2024 | |
| | | Closing and Opening of bids | | | | | 10.00 A.M on 17.04.2024 | |
| S. No | Bid Number | Description of Work | Estimated Costs(Rs) in Min Without VAT | Contract Period | Grade Required | Non-refundable fee | Refundable Bid Security Amount | Refundable Bid Security Validity Date |
| Source of Fund - PSDG | | | | | | | | |
| 01 | NP/04/43/02/BCP/ PSDG/2024/01 | Construction of tank complex for larvivorous fish production at AMC. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| 02 | NP/04/43/02/BCP/PSDG/2024/02 | Refurbishment of infrastructure at Chest Clinic. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| 03 | NP/04/43/02/BCP/PSDG/2024/03 | Construction of culvert at the entrance of CKD building at DH Mamadu. | 0.84 | 30 Days | C9 & C8 | 2,000.00 | 10,000.00 | 03.07.2024 |
| 04 | NP/04/43/02/BCP/PSDG/2024/04 | Establishment of fencing at DH poovarasankulam. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| 05 | NP/04/43/02/BCP/PS DG/2024/05 | Establishment of fencing and landscaping at DH Pavatkulam. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| 06 | NP/04/43/02/BCP/PSDG/2024/06 | Construction of pathway to quarters at PMCU Bogaswewa. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| Source of Fund - CBG | | | | | | | | |
| 01 | NP/04/43/02/BCP/CBG/2024/01 | Construction of Vehicle park at DH Omanthai. | 0.86 | 45 Days | C9 & C8 | 2,000.00 | 10,000.00 | 03.07.2024 |
| Source of Fund - PSSP | | | | | | | | |
| 01 | NP/04/43/02/ME/PSSP/2024/01 | Completion work of OPD & ETU Stage 2 at DH Omanthai. | 1.75 | 45 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| 02 | NP/04/43/02/BCP/PSSP/2024/02 | Renovation of Patient washroom and drainages system at DH Ulukkulam. | 0.84 | 45 Days | C9 & C8 | 2,000.00 | 10,000.00 | 03.07.2024 |
| 03 | NP/04/43/02/BCP/PSSP/2024/03 | Completion of OPD Building and Infrastructure development at DH Sithamparapuram. | 1.69 | 45 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |
| Source of Fund -RECURRENT | | | | | | | | |
| 01 | NP/04/43/02/ME/REC/2024/01 | Landscaping and Improvement of Drainage at DH Omanthai. | 1.69 | 60 Days | C9 & C8 | 2,000.00 | 20,000.00 | 03.07.2024 |

3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்பு பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding Data & Contract Data (பகுதி-5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை விலைமனுக்களை பரீட்சிக்க முடியும்.
6. ஒவ்வொரு பிரிவுக்காகவும் எழுத்துமூலமான விண்ணப்பத்தை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு (தொ.பே.இல. 0242224865, தொலைநகல் 024 2222892) சமர்ப்பிப்பதுடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை பணிமனையின் கணக்கு கிளையில் செலுத்தி 01.04.2024 தொடக்கம் 16.04.2024 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 15.00 மணிவரை ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைமனுக்கள் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு 17.04.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு முன்னதாக சேர்த்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும், பங்கேற்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் 17.04.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைமனுவுக்கு முந்திய மாநாடு 7ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 09.04.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவலின்படி மீளளிக்கப்படக்கூடிய விலைமனுப் பிணையை கொண்டதாக விலைமனுக்கள் இருத்தல் வேண்டும்.

**வைத்தியர்.மு. மகேந்திரன்.**
**தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**வவுனியா.**

**01.04.2024**

The Housewives’ companion
Classifieds on
Daily News

Daily News Classifieds, the Housewives’ companion

# விலைக்கோரல் அறிவித்தல்

## வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 052/T/2023**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய விமான சேவைகள் பாவனைக்காக 11 எண்ணிக்கையான உயர் அதிர்வெண் வானொலி ஒலிபரப்பு டிரான்ஸ்மீற்றர் மற்றும் ரிசீவர் உபகரணங்களை வழங்குதல்**

**(SUPPLY OF 11 NOS. OF VHF AIR BAND TRANSCEIVERS WITH ACCESSORIES FOR BIA, CIAR & MRIA)**

வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய விமான சேவைகள் பாவனைக்காக 11 எண்ணிக்கையான உயர் அதிர்வெண் வானொலி ஒலிபரப்பு டிரான்ஸ்மீற்றர் மற்றும் ரிசீவர் உபகரணங்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத பன்னிரண்டாரயிரத்து ஐந்நூறு ரூபா (12,500.00) தொகையை விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்கு 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை வழங்கல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் 2024 ஏப்ரல் 24ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் கோரும் போது செலுத்தப்படும் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் ரூபாவுக்கான (660,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264128 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

# கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2024/2025

## முந்தல் பிரதேச செயலகப் பிரிவு - புத்தளம் மாவட்டம்

2024 ஜுலை மாதம் 01ம் திகதி முதல் 2025 ஜுன் மாதம் 30ம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு முந்தல் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள் 2024.06.06ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2024.04.05ம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானியினை பார்வையிடவும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| முந்தல் | 01. மதுரங்குளி | காலை - 10.00<br>பி.ப. - 09.00 | காலை - 10.30 மணி<br>2024.06.06 | 1000.00 |
| முந்தல் | 02. உடப்பு | காலை - 10.00<br>பி.ப. - 09.00 | காலை - 10.30 மணி<br>2024.06.06 | 1000.00 |
| முந்தல் | 03. முந்தல் | காலை - 10.00<br>பி.ப. - 09.00 | காலை - 10.30 மணி<br>2024.06.06 | 1000.00 |
| முந்தல் | 04. முக்குதொடுவாவ | காலை - 10.00<br>பி.ப. - 09.00 | காலை - 10.30 மணி<br>2024.06.06 | 1000.00 |

2024.03.27

**எம்.எஸ்.பீ.டப்.டீ.எம்.எஸ்.பீ. மல்வில,**
**பிரதேச செயலாளர்,**
**முந்தல்.**

# பெறுகை அறிவித்தல்

## விவசாயத் திணைக்களம் (மே.மா)

மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு (மே.மா) தேவையான கீழ்க்காணும் விலங்குணவுகளை கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறை (NCB) இன் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை முறை | கேள்வி இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|
| NCB | WP/Ag/PD/3/5/04/2024/ NCB | லேயர் பீட் - 50 Kg | 2016 | Rs. 1000.00 |
| | | குரோபர் பீட் -25 Kg | 170 | |
| | | கால் நடை உணவு - 25 Kg | 225 | |
| | | சிப்பி - 25 Kg | 56 | |
| | | சிக் ஸ்டாடர் - 25 Kg | 56 | |
| | | புரொய்லர் ஸ்டாடர் - 50 Kg | 30 | |

கேள்விகோரல் ஆரம்பமாகும் திகதி : 2024.04.02

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 2024.04.22 பி.ப. 2.00

கேள்வி ஆவணங்களை 2024.04.02 முதல் 2024.04.22 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (மேற்படி அட்டவணையின் பிரகாரம்) மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படின் கட்டணம் செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் அல்லது www.agridept.wp.gov.lk இணையதளத்தின் ஊடாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் பொருட்களின் அளவை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல், நிராகரிக்கும் உரிமை மற்றும் பொருட்களின் அளவை மாற்றும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**மாகாண விவசாயப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம் (மே.மா),**
**மேல் மாகாண சபை, 7ம் மாடி,**
**இல. 2024, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல**

தொ.பே.இல:
011 - 2092675
011 - 2092679

# கேள்விக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

## மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்கு கேள்வி கோரல் பத்திரங்கள் 2024.04.02 முதல் 2024.04.26 பி.ப. 2.30 வரை விநியோகிக்கப்படுவதுடன் 2024.04.29 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கேள்வி வைப்பை மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி மாதிரிப் பத்திரங்களை மாத்திரம் பாவித்து அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படியை வழங்குவதற்காக கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இரு பிரதிகளுடனான கேள்வி ஆவணங்களை பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி சமர்ப்பிக்கும் உருப்படியை தெளிவாகக் குறிப்பிட்டு 2024 ஏப்ரல் 29 மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- 2024.04.29 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்து மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
- 2024.04.02 முதல் 2024.04.26 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.15 வரை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
- கேள்விகளைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்துடன் கம்பனியின் பதிவுச் சான்றிதழில் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விக்கு முன்னராக கூட்டம் 2024.04.24 மு.ப. 10.00 இற்கு மாவட்ட பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.
- கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் பெறுகை செயற்பாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு பொருந்துமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து கேள்வி திறக்கப்படும் தினம் அதாவது 2024.04.29 முதல் 2024.08.01 வரையான காலத்திற்கு செல்லுபடியாகுமாறு மருத்துவ அதிகாரி, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை பெயருக்கு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை (Bid Security) அல்லது நிதி வைப்பாக மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
- தேசிய போட்டி கேள்வி முறை (NCB) இன் பிரகாரம் கேள்வி கோரல் மேற்கொள்ளப்படும்.
- தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்விப் பற்றிய இறுதி தீர்மானம் எடுக்கும் உரிமை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

| தொடர் இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | RADIATION PROTECTION GARMENTS | | 2,000 | 100,000.00 |
| | Skirts and Vest | 10 | | |
| | Sleeveless apron | 2 | | |
| | Thyroid Shields | 6 | | |
| | Head Covers (Caps) | 6 | | |
| | Gonadala Shields For Patients | 2 | | |
| | Glasses (Goggles) | 3 | | |
| 2 | Warmer, Patint | 1 | 2,000.00 | 30,000.00 |
| 3 | Warmer, Blood and Fluld | 1 | 2,000.00 | 20,000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகலை.**

**விசாரணைகள் - கணக்காளர்,**
**055-2276261/ 055 2276912**

## தென் மாகாண சபை

## தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் (2024/2025)**

தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தென் மாகாண பிரதான செயலகம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்கு 2024-06-01ஆம் திகதி முதல் 2025-05-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கான சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களை 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-25ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பின்வரும் வகையில் கட்டணங்களைச் செலுத்தி காலி எச். எஸ். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதான செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| விலைக்கோரல் இல. | விபரங்கள் | சேவைக் காலம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைமனுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| SP/CS/NCB/2024/03 | தென் மாகாண பிரதான செயலகம், வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் மற்றும் பயிற்சி நிறுவனம், லபுதுவ பிரதான செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதி, லபுதுவ கவுன்சிலர்களின் விடுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடப்பரப்பு, லபுதுவ உத்தியோகபூர்வ விடுதி கட்டிடத்தொகுதி மற்றும் ஹம்பாந்தோட்டை மயுரபுர விடுமுறை களிப்பிடத்திற்கான சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல் | 2024.06.01ஆம் திகதி முதல் 2025.05.31ஆம் திகதி வரை | 100,000.00 | 2,000.00 |

03. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள எந்தவொரு வங்கியிலிருந்தும் தென் மாகாண பிரதான செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2024.07.25ஆம் திகதி வரை செல்லுபடியாகும் பிணை முறி அல்லது பிரதான செயலகத்தின் கணக்கியல் பிரிவிற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விலைக்கோரல் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

04. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களுக்கு இயைபான விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளை வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் உள்ளிட்டு அவ்வுறைக்கு முத்திரைக் குறியிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-04-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான செயலாளர், பிரதான செயலகம், எச்.எஸ். தஹநாயக்க மாவத்தை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து பிரதான செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் ''சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கான விலைமனுக்கள்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. விலைமனுக்கள் திறக்கப்படுவதானது 2024-04-26ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து பி.ப. 2.30 மணிக்கு பிரதான செயலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**கவனிக்கவும்:** கேள்வி விளம்பரம் தென் மாகாண பிரதான செயலகத்தின் www.cs.sp.gov.lk எனும் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண பிரதான செயலகம்,**
**எச்.எஸ். தஹநாயக்க மாவத்தை, காலி.**
**தொலைபேசி இலக்கம் : 061-4944016/091-4946368**
**மின்னஞ்சல் : procurementplan1@gmail.com**

## அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம்

**(கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு)**

**ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்**

# ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பழக் கூழ் பதப்படுத்தும் நிலையத்தை நிறுவுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட பழச் செயலிகளிடமிருந்து ஆர்வமுள்ள அறிவிப்புகள் வரவேற்கப்படுகின்றன.

பயிர் சேதத்தை எவ்வாறு குறைப்பது என்பது இன்று தேசிய அளவில் பெரும் சவாலாக உள்ளது. ஒரு தேசிய நிறுவனமாக, NIPHM பழங்களின் புத்துணர்ச்சியை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் பழ பதப்படுத்தும் வலயங்களை நிறுவுவதன் மூலம் அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைக்க பல நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இலங்கையில் அதிக பெறுமதியான சந்தைகளை பாதுகாத்தல் போன்ற பழங்களை பதப்படுத்தும் தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்வது அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைக்கிறது மற்றும் இலங்கை பழ உற்பத்தியாளர்கள், சேகரிப்பாளர்கள் மற்றும் பழ பதப்படுத்தும் தொழிலில் உள்ள ஏனைய தொழில்முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது. முக்கியமானது. NIPHM நிறுவனம் மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தத் திட்டத்தைத் தொடங்க முடிவு செய்தது. அதன் பிரகாரம் இலக்குப் பயனாளர்களுக்கு எங்கள் அமைப்பு, பழங்களின் மதிப்பைக் கூட்டும் முறைகள் உட்பட, பழக் கூழ் உற்பத்தித் தொழிலை ஆரம்பிப்பதற்கு எமது நிறுவனம் அடிப்படை உதவிகளை வழங்குகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம்/அமைப்பிற்கு இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) முன்மொழியப்பட்ட வசதிகளானது:

- உற்பத்தி திறன் அபிவிருத்தி மற்றும் உற்பத்தி செயல்முறைகளை வலுப்படுத்துவதற்கு 25 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
- முழுமையான பதப்படுத்தும் நிலையம் (வாடகை அடிப்படையில்) வழங்கப்படும்.

**நிறுவனத்தின் உறுதித்தன்மை மற்றும் பங்கு:**

- ஆகக் குறைந்தது 5 வருடங்கள் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக செயற்படுதல்.
- விவசாயிகள், பழம் சேகரிப்பவர்கள், சிறிய அளவிலான பதப்படுத்துநர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய கிராம அளவிலான அமைப்புகளுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.
- ஒருங்கிணைந்த கிராமிய மட்ட அமைப்பு திறன்களை மேம்படுத்த தேவையான அறிவு மற்றும் பயிற்சி அளிக்கும் ஆற்றல்.

**நிறுவனத்தின் தகுதி பெயர்கள்:**

- நிறுவனம்/அமைப்பிற்கு பழச் சந்தை மற்றும் நிகழ்நிலையில் நல்ல அனுபவம்.
- பதப்படுத்தப்பட்ட பழ உற்பத்தியின் வருடாந்த அளவு பற்றிய அறிக்கைகள்.
- நிறுவனம் விவசாய அமைப்புகள் அல்லது ஏதேனும் சமூக அளவிலான அமைப்பில் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- செல்லுபடியாகும் நிறுவன /வியாபாரப் பதிவு பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: உற்பத்தி திறன் கொண்ட நிறுவனத்தின் விவரங்களை உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாட்டு (EOI) முன்மொழிவு தயாரிக்கப்பட வேண்டும். EOI தயாரிப்பதற்கான வழிகாட்டிகளை அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் இணையதளத்தில் www.niphm.lk பெற்றுக்கொள்ளலாம்.

**சுருக்கப்பட்டியல் முறை:**
வழங்கப்படும் ஆர்வ வெளிப்பாடுகள் பின்வரும் மூலப் பிரமாணங்களின் அடிப்படையில் பட்டியலிடப்படும்,

- வழங்கப்பட்ட மூலப் பிரமாணங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டு (EOI) திட்ட முன்மொழிவின் பிரகாரம்
- இது போன்ற திட்டங்களை செயற்படுத்துவதில் அனுபவம் தொடர்பான ஆவணச் சான்றுகள்
- கடந்த காலத்தில் வெளிப்படுத்தியுள்ள நிர்வாக நிபுணத்துவம்
- நிறுவனம் வசமுள்ள நிதிக் கொள்ளளவு

**முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்:**
ஆர்வமுள்ள தரப்பினர் தமது ஆர்வ வெளிப்பாடுகளை பதிவுத் தபாலில் அல்லது கூரியர் மூலம் அல்லது அமைச்சுப் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட செய்யப்பட்ட வன் பிரதியை உள்ளிடுவதன் மூலம் அல்லது தரப்பட்டுள்ள info@niphm.lk எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் தங்கள் ஆர்வத்தை (EOI) 2024.04.22ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன் அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவனத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைகள்: 071- 0343210 / 071 5342224

**தலைவர்,**
**அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம்,**
**ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம், இலங்கை.**
**தொலைபேசி: +9425 3230000**

**இணையதளம்: www.niphm.lk**
**மின்னஞ்சல்: info@niphm.lk**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தற்போதுள்ள சுங்க அதிகாரிகளின் அலுவலகத்திற்கு இடைநிலை தளமொன்றை நிர்மாணித்தல்**

**(CONSTRUCTION OF MEZZANINE FLOOR AT EXISTING ARRIVAL CUSTOM OFFICE AT BIA, KATUNAYAKE)**

**கேள்வி இல. 157/T/2023**

வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவரினால் 47 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் கிரயம் + ஏறத்தாழ 10% தற்செயலான செலவுகளைக் கொண்டதும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதுமான கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தற்போதுள்ள சுங்க அதிகாரிகளின் அலுவலகத்திற்கு இடைநிலை தளமொன்றை நிர்மாணித்தல் எனும் வேலைக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. விபரக் குறிப்புகள், அளவுப் பத்திரங்கள் மற்றும் வரைபடங்களின் பிரகாரம் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முடிவுறுத்தல் காலமானது வேலை தொடங்கப்படும் நாள் முதல் 90 நாட்களாகும்.

விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் இடம்பெறும்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதனையொத்த வேலைகளில் அனுபவம் சகிதம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) முன்னைய ICTAD நிறுவனத்தில் C4 அல்லது C5 தரத்தில் (கட்டிட நிர்மாண விசேடத்துவம்) ஒப்பந்தக்காரர்கள் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், சிவில் பொறியியல் (P&D), சிவில் பொறியியல் (P&D) தலைவரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-2263502 மற்றும் 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா தொகையை செலுத்தியதன் பின் 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு, 01ஆம் இலக்க பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, இல. 01, வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவு, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 500,000.00) தொகைக்கு (கோரிக்கை விலைக்கோரல் உத்தரவாதம்) விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது ரொக்கப் பண வைப்பொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-04-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், புதிய நிர்வாகக் கட்டிடம், 4ஆம் மாடி, சிவில் பொறியியல் (P&D) பிரிவு கூட்ட அறையில் இடம்பெறும் என்பதுடன் சகல விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது பெயரிடப்பட்ட பிரதிநிதிகளுக்கு இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

# கேள்விக்கான அழைப்பு

**தென் ம ாகாண வீதிகளுக்கிடையிலான**
**பயனிகள் போக்குவரத்து அதிகாரசபை**

## விசேட மற்றும் சாதாரண சேவை வருடாந்த பயனிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்

தென் மாகாண வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவரால் தென் மாகாணத்தின் பொது பயனிகள் போக்குவரத்து தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகள், பயனிகளின் வேண்டுகோள் மற்றும் நாட்டின் அபிவிருத்தி தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையினால் பரீட்சித்து, இணங்கானப்பட்ட வீதிகளுக்கு சாதாரண பஸ் சேவை/ சாதாரண வீதியில் சொகுசு பஸ் சேவை/ தெற்கு அதிவேக வீதி ஊடாக சொகுசு பஸ் சேவையை வருடாந்த அனுமதி கட்டணங்கள் அறவிடும் அடிப்படையின் கீழ் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் 15ஐ விநியோகிப்பதற்கு, தகைமையுடைய, தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. விசேட மற்றும் சாதாரண சேவை வருடாந்த பயனிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்திற்காக கேள்விகளை வழங்கும் அதிகாரசபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது. ளேவிக்காக அழைப்பு விடுக்கப்படுகின்ற வீதிகள் கீழே பிரசுரிக்கப்படுவதுடன், சகல பஸ் சேவைகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் அனுமதிக்கப்பட்ட ஆசன கொள்ளளவு கொண்ட பஸ்களை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விக்கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் கீழ் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

வேறு வேறாக உரு கேள்விக்கு ரூ. 50,000.00 வீதம் மீளளிக்கப்படும் பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படும் சகல வீதிகள் சார்பாகவும் குறித்த நேரசூசி மற்றும் கட்டணக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கேள்வி ஆவணத்திற்குள் விண்ணப்பத்துடன் நேரசூசி மற்றும் கட்டண குறிப்பு விபரங்கள் வழங்கப்படும்.

கேள்வி வைத்தல் மூலம் வழங்கப்படும் வீதிகளின் பிரயாணங்கள் ஏனைய பஸ் சேவைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சட்டரீதியான விடயங்களின் அடிப்படையில் நீடித்தல் அல்லது வேறு வீதிகளுக்கு திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்படமாட்டது.

இவ் வீதிகளில் வீதி தேவைப்பாட்டின் அடிப்படையில் பஸ் சேவைகளை உறுதிப்படுத்தும் போது இ.போ.சவுடன் (60% - 40%) அடிப்படையில் எதிர்காலத்தில் பஸ் சேவைகள் உறுதிப்படுத்தப்படும். அதன்படி வீதிகள் பரீட்சிக்கப்பட்டு பஸ் சேவையை நடத்திச் செல்லும் ஆற்றல் கவனத்திற் கொண்டு மாத்திரம் கேள்வி பெறுமதிகளை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கிறேன். பயனிகள் சேவை பற்றிய தெளிவின்றி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக கூடுதல் விலைமனுக்களை சமர்ப்பித்து அதனடிப்படையில் பின்னர் மேன்முறையீடு செய்யும் உரிமை விண்ணப்பதாரிக்கு கிடையாது.

கேள்வி உரிமை பெற்றுக் கொண்ட பின்னர் 60 நாள் காலத்திற்குள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு பஸ் சேவை ஆரம்பிக்க வேண்டியதுடன், அக் காலம் நீடிக்கப்படமாட்டாது. அவ் உத்தரவாதம் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட நபரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கேள்வி அழைப்புடன் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுவதால் அது பற்றிய தெளிவுடன் கேள்விதாரர் கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**கேள்வி வைப்பதற்காக சமர்ப்பிக்கப்படும் வீதி விபரங்கள்**

**கேள்வி அழைப்பு - 01 (சாதாரண பஸ் சேவை அனுமதிப்பத்திரங்கள்)**

| கேள்வி தொடர் இலக்கம் | வீதி இலக்கம் | சேவை | அனுமதிக்கப்பட்ட ஆசன கொள்ளளவு | வருடாந்த குறைந்தபட்ச கேள்விப் பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|
| 2024/OPR/DEV/F1/01 | 336/2 | சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத வைத்தியசாலை, ரணவிரு கிராமம், மயுரபுர - களஞ்சிய சந்தி - ஹம்பாந்தோட்டை | 30 | 272,160.00 |
| 2024/OPR/DEV/F1/02 | 344/12 | அம்பலந்தொட்ட - தெஹிகஹலந்த - கரிவிலயால - 05 அடி எலசந்தி - கொடிகல - மயுரபுர - தாவரவியற்பூங்கா - சித்ராகல - அம்பலந்தொட்ட | 30 | 267,300.00 |
| 2024/OPR/DEV/F1/03 | 348/4 | யட்டியன - ஹிங்குருபன்னல - லோலங்ஆர - ரன்மலே-ஹின்னதெனிய - திக்வெல்ல | 35 | 337,050.00 |
| 2024/OPR/DEV/F1/04 | 371/1 | பெலிகம- வலான வைத்தியசாலை - முதுகமுவ - ரணமயுரகம - நாகந்ர்த - கோங்கன்ஹேன - திகரத்த - அஹங்கம | 30 | 395,280.00 |
| 2024/OPR/DEV/F1/05 | 443 | யட்டியன - திஹகொட - வெல்ல தொட்ட - மாலிம்பட - நாகொடசந்தி - அக்குருகொட - சுல்தானகொட - லெபீம | 35 | 322,560.00 |
| 2024/OPR/DEV/F1/06 | 585/4 | வலஸ்முல்ல - ஓலுஆர - உடதெனிய - கிவுல்முல்ல | 30 | 164,700.00 |

**கேள்வி அழைப்பு 02 (சாதாரண வீதியில் சொகுசு அனுமதிப்பத்திரம்)**

| கேள்வி தொடர் இலக்கம் | வீதி இலக்கம் | சேவை | அனுமதிக்கப்பட்ட ஆசன கொள்ளளவு | வருடாந்த குறைந்தபட்ச கேள்விப் பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|
| 2024/OPR/DEV/F1/07 | 334/1/AC | மாத்தறை - திக்வெல்ல - மஹவெல - தங்கல்ல - ஹம்பாந்தோட்டை | 35 | 1,008.00 |
| 2024/OPR/DEV/F1/08 | 382/AC | அக்குரஸ்ஸ - யக்கல - முலல - மாகும்புர - கராப்பிட்டிய - காலி | 35 | 932,400.00 |
| 2024/OPR/DEV/F1/09 | 388/AC | பலபிட்டிய - அம்பலங்கொட - ஹிக்கடுவ - காலி - மாத்தறை - ருஹுணு பல்கலைக்கழகம் | 35 | 1,008,000.00 |
| 2024/OPR/DEV/F1/10 | 404/2/AC | பிட்டிகல - மாபலகம - வந்துரம்ப - கராப்பிட்டிய - காலி | 35 | 1,058,400.00 |

**கேள்வி அழைப்பு - 03 (தெற்கு அதிவேக வீதியூடாக சொகுசு அனுமதிப்பத்திரம்)**

| கேள்வி தொடர் இலக்கம் | வீதி இலக்கம் | சேவை | அனுமதிக்கப்பட்ட ஆசன கொள்ளளவு | வருடாந்த குறைந்தபட்ச கேள்விப் பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|
| 2024/OPR/DEV/F1/11 | 17/EX/AC | சூரியவெவ - பதலங்கல - அங்குணுகொலபெலஸ்ஸ - கராப்பிட்டிய - காலி (அங்குணுகொலபெலஸ்ஸ - பின்னதுவ அதிவேக வீதி ஊடாக) | 35 | 841,050.00 |
| 2024/OPR/DEV/F1/12 | 32/5/EX/AC | மித்தெனிய - வீரகெட்டிய - தங்கல்ல - பெலிஅத்த - கராப்பிட்டிய, காலி (கஹவத்த - பின்னதுவ அதிவேக வீதி ஊடாக) | 35 | 746,550.00 |
| 2024/OPR/DEV/F1/13 | 386/4/EX/AC | ஊரகஸ்மங்ஹந்தி - எல்பிட்டிய - கராப்பிட்டிய - காலி - (குருந்துகஹ - ஹெதெக்ம - பின்னதுவ அதிவேக வீதி ஊடாக) | 35 | 1,360,800.00 |
| 2024/OPR/DEV/F1/14 | 386/5/EX/AC | எல்பிட்டியா - பட்டபொல - அம்பேகம - பத்தேகம - மாத்தறை - திக்வெல்ல - மஹவெல, தங்கல்ல - (பத்தேகம - கொடகம அதிவேக வீதியூடாக) | 35 | 1,530,900.00 |
| 2024/OPR/DEV/F1/15 | 390/EX/AC | அம்பலங்கொட - மஹஏதன்ட - கராப்பிட்டிய - காலி (குருந்துகல - ஹெதெக்ம - பின்னதுவ அதிவேக வீதியூடாக) | 35 | 1,247,400.00 |

1. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வி அழைப்பிலும் வேறுவேறாக குறிப்பிட்டு கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூபா இரண்டாயிரம் (ரூ. 2000.00) விண்ணப்பப் படிவக் கட்டணத்தை காசாகச் செலுத்திய பின்னர் 2024.04.01 முதல் 2024.04.24 வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை ஓட்டப் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.

2. ஆர்வமுள்ள தகுதியான, தகைமை கொண்ட கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் தலைமையகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

3. கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 2024 ஏப்ரல் 25ம் திகதி 11.30 மணியாவதுடன் அன்றே 12.00 இற்கு அதிகாரசபையின் தலைமையக கேட்போர் கூடத்தில் பகுதிகளாக கேள்விகள் திறக்கப்படும்.

4. முறையாகப் பூர்த்தி செய்து, பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் “நகல்பிரதியுடன்” பதிவுத் தபாலில் காலி, கோட்டை, லேன்பான் வீதி, இல. 67 இல் அமைந்துள்ள தென் மாகாண வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு கிடைக்குமாறு அனுப்புதல் அல்லது அதிகாரசபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல், கேள்விகள் பெற்றுக் கொள்ளும் இறுதி நேரத்திற்கு அல்லது அதற்கு முன் இடம்பெறல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் அதனோடு சம்பந்தப்பட்ட தொடர் இலக்கத்துடன் இணைக்கும் சேவையை சாதாரண பஸ் சேவை அனுமதிப்பத்திரத்துடன் “சாதாரண பஸ் சேவை அனுமதிப்பத்திரம் - 2024” என்றும், இணைக்கப்படும் சேவை சாதாரண சேவையின் சொகுசு அனுமதிப்பத்திரமாயின் “சாதாரண வீதியின் சொகுசு அனுமதிப்பத்திரம் - 2024” என்றும் இணைக்கப்படும் சேவை தெற்கு அதிவேக வீதியூடாக சொகுசு அனுமதிப்பத்திரம் - 2024” எனவும் குறிப்பிடுதல் வேண்டும்.

5. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கட்டாயமாக சமுகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. இக் கட்டளையை மீறுகின்ற விண்ணப்பதாரர்களின் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்பட மாட்டாது. எக்கேள்வியையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் உரிமையாகும். அடிப்படை தகவல்களை தென் மாகாண வீதிகளுக்கிடையிலான வீதி போக்குவரத்து அதிகாரசபையின் சகல மாவட்ட அலுவலகங்களில் அல்லது இல: 67, லேன்பான் வீதி, கோட்டை காலி என்ற முகவரியில் அல்லது www.sprpta.lk இணையதளத்தில் மற்றும் தொ.பே.இலக்கம் : 091 - 2234237 / 091 - 2227074 மூலம் விசாரிக்கலாம்.

**அருன குணரத்ன,**
**தலைவர்,**
**தெ.அ.வீ.ப.போக்குவரத்து அதிகாரசபை**
**காலி**
**2024.03.27**







பாணந்துறை, ஸ்ரீ சுமங்கல கல்லூரி மற்றும் மொரட்டுவை மஹாவித்தியாலய கல்லூரிகளுக்கு இடையிலான 72ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் (30) வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவுற்றது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்ரீ சுமங்கல கல்லூரியின் விஷ்வ லஹிரு டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளின் சிரேஷ்ட முகாமையாளர் பிரஷான் கொஸ்டாவிடமிருந்து ஆட்ட நாயகன் விருதை பெறுவதை காணலாம்.

# முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 531 ஓட்டங்களைப் பெற்று ஆதிக்கம்

ஆறு வீரர்களின் அரைச்சதத்துடன் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸுக்கு 531 ஓட்டங்களை குவித்தது. இதில் முதல் ஏழு வீரர்களில் அஞ்சலோ மத்தியூஸ் தவிர அனைவரும் ஐம்பதுக்கு மேல் ஓட்டங்களை பெற்றதோடு குசல் மெண்டிஸ் (93) மற்றும் கமிந்து மெண்டிஸ் (ஆட்டமிழக்காது 92) இருவரும் சதத்தை தவறவிட்டனர்.

துடுப்பாட்டத்திற்கு சாதகமான சட்டொக்ராம் மைதானத்தில் நேற்று முனத்தினம் (30) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட திருமானித்த இலங்கை அணி ஆடுகளத்தின் சாதக நிலையை முழுமையாக பயன்படுத்திக் கொண்டது.

ஆரம்ப வீரர்களான நிஷான் மதுஷங்க (57) மற்றும் திமுத் கருணாரத்ன (86) முதல் விக்கெட்டுக்கு 96 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டதோடு பின்னர் வந்த வீரர்களும் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். முதல் நாளில் குசல் மெண்டிஸ் 150 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 93 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் 314 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி தனது ஓட்டங்களை மேலும் அதிகரித்துக் கொண்டது.



அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா (70) மற்றும் தினேஷ் சந்திமாலும் (59) அரைச்சதம் பெற்றனர்.

எனினும் மீண்டும் ஒருமுறை சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய கமிந்து மெண்டிஸ் தொடர்ச்சியாக மூன்றாவது சதத்தை பெறுவதை எட்டு ஓட்டங்களால் தவறவிட்டார். அவர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்த போதும் இலங்கை அணியின் கடைசி விக்கெட்டும் பறிபோனது.

167 பந்துகளுக்கு முகம்கொடுத்த கமிந்து மெண்டிஸ் 7 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 92 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் அவர் டெஸ்ட் போட்டிகளில் தனது முதல் நான்கு இன்னிங்ஸ்களிலும் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஜாவிட் மியன்டாட் சாதனையை சமன் செய்தார்.

மியன்டாட் 1976இல் தனது முதல் நான்கு டெஸ்ட் இன்னிங்ஸ்களிலும் 419 ஓட்டங்களை பெற்ற நிலையில் கமிந்துவும் தனது நான்கு இன்னிங்ஸ்களிலும் அதே ஓட்டங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 159 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 531 ஓட்டங்களை பெற்றது. பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பில் ஷகீப் அல் ஹஸன் 110 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் நேற்று தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி ஆட்ட நேர முடிவின் போது 15 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஆரம்ப வீரர் மஹ்மூத் ஹசன் ஜோய், லஹிரு குமாரவின் பந்துக்கு 21 ஓட்டங்களில் போல்டானார்.




# ஐ.பி.எல். இல் இருந்து விலகினார் ஹசரங்க



இடது குதிகால் பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இலங்கை சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க தற்போது நடைபெற்று வரும் இந்திய பிரீமியர் லீக் தொடரில் இருந்து முழுமையாக விலகியுள்ளார்.

இம்முறை ஐ.பி.எல். தொடரில் ஹசரங்கவை சன்ரைசஸ் ஹைதராபாத் அணி இந்திய ரூபா 1.5 கோடிக்கு வாங்கியபோதம் அது 2022 ஆம் ஆண்டு அவரை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி இந்திய ரூபா 10.75 கோடிக்கு வாங்கியதை விடவும் மிகக் குறைவான தொகையாகும்.

"பாத மருத்துவரை சந்தித்த பின் குணமடைவதற்கு மேலும் காலம் எடுத்துக் கொள்ளும் என்று தெரியவந்ததை அடுத்து அவர் ஐ.பி.எல். இல் பங்கேற்க மாட்டார்" என்று இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஹசரங்க டுபாய் சென்று மருத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை பெற இருப்பதாக தெரியவருகிறது.

"குதிகாலில் ஒரு வீக்கம் உள்ளது. அவர் ஊசி போட்டே விளையாடுகிறார். எனவே, உலகக் கிண்ணத்திற்கு முன்னர் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர் தீர்மானித்திருப்பதோடு இந்த ஆண்டு ஐ.பி.எல். இல் இருந்து விலகுவதாக அவர் எமக்கு அறிவித்துள்ளார்" என்று டி சில்வா மேலும் தெரிவித்தார். டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ளது.

# மீண்டும் தலைவரானார் பாபர்



பாகிஸ்தான் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டின் அணித் தலைவராக பாபர் அஸாம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் சோபிக்கத் தவறியதை அடுத்து அணித் தலைமை பொறுப்பில் இருந்து 29 வயதான அஸாம் விலகியிருந்தார். இந்நிலையில் வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் ஷா அப்ரிக்கு பதில் அவர் மீண்டும் டி20 அணித் தலைமை பொறுப்புக்குத் திரும்பியுள்ளார்.

இதன்படி அவர் எதிர்வரும் டி20 உலகக் கிண்ணத்தில் பாக். அணிக்கு தலைமை வகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு பிரதேச சாம்பியனானது KSC

காரைதீவு குறூப் நிருபர்



காரைதீவு பிரதேச செயலகம் வருடாந்தம் நடத்தி வரும் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் இவ்வாண்டுக்கான ஒட்டுமொத்த சம்பியனாக காரைதீவு விளையாட்டு கழகம் (KSC) தெரிவு செய்யப்பட்டது.

அக் கழகம் 20 தங்கப் பதக்கங்களையும், 16 வெள்ளிப் பதக்கங்களையும், 16 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாம்பியனாக தெரிவாகி சாதனை படைத்தது.

இரண்டாம் இடத்தை ஜொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும் மூன்றாவது இடத்தை விவேகானந்தா விளையாட்டு கழகமும் வென்றன.

சாம்பியனாக சாதனை படைத்தமைக்காக தமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் வி.விஜயசாந்தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# தென்னாபிரிக்க அணிக்கு இலங்கை மகளிர் பதிலடி



பதினெட்டு வயதான விஷ்மி குணரத்ன டி20 சர்வதேச போட்டியில் பெற்ற முதல் அரைச்சதத்தின் உதவியோடு தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி தொடரை 1–1 என சமநிலைக்கு கொண்டுவந்தது.

பொட்ச்செப்ரூமில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப விராங்கனை அனெக் கொச் 50 ஓட்டங்களை பெற்றார். தொடர்ந்து பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 138 ஓட்டங்களை எட்டியது. விஷ்மி குணரத்ன ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களை பெற்றதோடு கவிஷா டில்ஹாரி ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களை குவித்தார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதலுக்கு மத்தியில் கெய்ரோவில் புதிய பேச்சு ஆரம்பம்

## உதவிக்குக் காத்திருந்தவர்கள் மீது மீண்டும் தாக்குதல்



காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடரும் நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நேற்று (31) எகிப்து தலைநகர் கெய்ரோவில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

பல மருத்துவமனைகள் உட்பட முற்றுகையில் இருக்கும் காசாவின் பல இடங்களிலும் நேற்று (31) உக்கிர மோதல்கள் இடம்பெற்றதோடு இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருந்தன.

காசா நகரின் தென்கிழக்கில் உள்ள குவைட் சுற்றுவட்டப்பாதையில் உதவிப் பொருட்களுக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் (30) மீண்டும் ஒருமுறை நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டு வீச்சு தாக்குதல்களில் 17 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த குவைட் சுற்றுவட்டப்பாதையில் உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் பல முறை தாக்குதல் நடத்தி இருக்கும் நிலையில் இதனை ஒரு 'மரணப் பொறி' என்று பலஸ்தீனர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் உணவு மற்றும் அடிப்படை பொருட்கள் இல்லாத நிலையில் உயிராபத்துக்கு மத்தியிலும் மக்கள் அந்தப் பகுதியில் உதவி லொறிகள் வரும் வரை கூடியிருப்பதாக அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் விபரித்துள்ளார்.

காசாவில் தரை வழியாக உதவிகள் செல்வதை இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து முடக்கி வரும் நிலையில், அங்கு பஞ்சம் ஒன்று ஏற்படும் அச்சுறுத்தல் நெருங்கி இருப்பதாக ஐ.நா மற்றும் உதவி அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

இந்நிலையில் பல நாடுகளும் வானில் இருந்து உதவிகளை போட்டு வருவதோடு மத்திய தரைக்கடல் தீவு நாடான சைப்ரசில் இருந்து 400 தொன் உதவிப் பொருட்களை சுமந்த இரண்டாவது கப்பல் காசாவை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது.



தெற்கு நகரான கான் யூனிஸ் மற்றும் காசா நகரின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 13 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது. இதில் கான் யூனிஸின் பானி சுஹைலா சிறு நகரின் பொதுமக்கள் குழு ஒன்றின் மீது இடம்பெற்ற இஸ்ரேலின் செல் வீச்சில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் மஜதி குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெண் ஒருவர் மற்றும் அவரது குழந்தை கொல்லப்பட்டுள்ளனர்.

### மருத்துவமனை முற்றுகை

காசாவின் பெரும்பகுதி வெறும் இடிபாடுகளாக மாறியிருக்கும் சூழலில் அங்குள்ள பல மருத்துவமனைகளைச் சூழ கடும் மோதல் நீடித்து வருகிறது. இந்த மருத்துவமனைகளில் பலஸ்தீன போராளிகள் மறைந்திருப்பதாக இஸ்ரேல் குற்றம்சாட்டிய போதும் அதனை அவர்கள் மறுத்து வருகின்றனர்.

காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையில் கடந்த 13 நாட்களுக்கு மோலாக இஸ்ரேல் நடத்தும் முற்றுகையில் 400க்கும் அதிகமான நோயாளிகள், போரினால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா மருத்துவ அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மருத்துவமனைக்குள் தொடர்ந்து 107 நோயாளர்கள் இருப்பதாகவும் இவர்களில் 30 அங்கவீனமுற்றவர்கள் அடங்குவதாகவும் காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அவர்களை வெளியேற்றும் முயற்சியை இஸ்ரேல் இராணுவம் தடுத்ததாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

தெற்கு நகரான கான் யூனிஸில் உள்ள நாசிர் மற்றும் அல் அமல் ஆகிய இரு மருத்துவமனைகளிலும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

போருக்கு முன்னர் 36 மருத்துவமனைகள் இருந்த காசாவில் தற்போது குறைந்த பட்சம் இயங்கக் கூடிய வெறும் 10 மருத்துவமனைகளே உள்ளன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் புற்றுநோய் சிகிச்சை, குண்டு தாக்குதல்களில் காயம் அடைந்தவர்கள், சிறுநீரக சிகிச்சை மற்றும் ஏனைய நாட்பட்ட நோய் பாதிப்புகள் உட்பட உயிர் காக்கும் மருத்துவ சிகிச்சைக்காக காசாவில் இருந்து சுமார் 9000 நோயாளர்கள் வெளியேற்றப்பட வேண்டி இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார்.

ஐந்து மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 33 ஆயிரத்தை நெருங்கி உள்ளது. இதில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரேலில் பாரிய ஆர்ப்பாட்டம்

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே காசாவில் போர் வெடித்தது. இதில் பலஸ்தீன போராளிகளால் கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்து 130 பேர் காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 34 பேர் உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இந்தப் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசு இஸ்ரேலுக்குள் அரசியல் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில் டொஹா மற்றும் கெய்ரோவில் இடம்பெற்று வரும் புதிய சுற்று போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளுக்கு நெதன்யாகு கடந்த வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்திருந்தார்.

இதனையோட்டி கெய்ரோவில் நேற்று புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதாக எகிப்து உளவுப் பிரிவுடன் நெருக்கமான அல் கஹ்ரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் காசாவில் பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் தற்காலி போர் நிறுத்தம் ஒன்றுக்கு முயன்று வருவதோடு, இஸ்ரேலிய துருப்புகளை வாபஸ்பெறச் செய்து காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஹமாஸ் அமைப்பு முயற்சிக்கும் நிலையில் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பணயக்கைதிகளின் உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அவர்களை விடுவிக்கக் கோரி கடந்த சனிக்கிழமை இரவு டெல் அவிவ் நகரில் பாரிய பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர். இவர்கள் தீ வைப்புகள் மற்றும் நெடுஞ்சாலைகளை முடக்கிய நிலையில் நீர்ப்பீச்சி அடிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரான ஹமாஸ் பிடியில் இருந்து தப்பிய ராஸ் பென் அமி என்பவர், பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தையாளர்கள் உடன்பாடு ஒன்றை எட்ட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

'ஆண் மற்றும் பெண் பணயக்கைதிகளுக்காகவும் இஸ்ரேலிய மக்களுக்காகவும் காட்டாரில் உள்ள பேச்சுவார்த்தையாளர்கள் உடன்பாடு ஒன்று இல்லாமல் திரும்ப வேண்டாம் என்று பிரதமர் உத்தரவிட வேண்டும்' என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

நெதன்யாகுவின் வாசஸ்தலம் மற்றும் இஸ்ரேலின் ஏனைய நகரங்களிலும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்கா முயற்சித்து வருகின்றன. கடந்த ஆண்டு நவம்பரில் எட்டப்பட்ட போர் நிறுத்தம் ஒரு வாரம் மாத்திரமே நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று ஆரம்பமான கெய்ரோ பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் பிரதிநிதிகளை அனுப்பியபோதும் ஹமாஸ் தனது பிரதிநிதிகளை அனுப்புவதற்கு முன்னர் இஸ்ரேலுடனான மத்தியஸ்தர்களின் பேச்சுவார்த்தையின் முடிவுகளுக்கு காத்திருப்பதாக அந்த அமைப்பை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

காசாவில் அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஐ.நா பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.